விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 04 வெள்ளிக்கிழமை (17.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழர்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகள்!

## கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாக பான் கீ மூன் குற்றச்சாட்டு



(ஜெனிவா)

**இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னரும் தமிழ் மக்களுக்கு எதிரான ஓர் ஆயுதமாக பாலியல் ரீதியான வன்முறைகள் இன்னமும் பிரயோகிக்கப்பட்டு வருவதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

உலகில் பாலியல் வன்முறைகளை ஆயுதமாகப் பயன்படுத்தும் இலங்கை உள்ளிட்ட 19 நாடுகள் தொடர்பில் ஐ.நா பாதுகாப்புச் சபையில் பான் கீ மூன் சமர்ப்பித்துள்ள போர்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகள் என்ற தலைப்பிலான அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், தற்போது போர் இடம்பெற்று வரும் ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, கொலம்பியா, கொங்கோ ஜனநாயக குடியரசு, ஈராக், லிபியா, மாலி, மியான்மார், நைஜீரியா, சோமாலியா, தென்சூடான், சூடான், சிரியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் குறித்தும், போர் முடிவுக்கு வந்த சூழலில் உள்ள இலங்கை, பொஸ்னியா-ஹெர்சகோவினா, ஐவரிகோஸ்ட், லைபீரியா, நேபாளம் ஆகிய நாடுகள் குறித்தும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு போர் முடிவுக்கு வந்த பின்னரும்

23ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு, கிழக்கில் தேசிய கீதத்தினை தமிழில் பாட ஆவன செய்யுங்கள்!

## அதுவே சிறப்பானதாக அமையும்-ராஜித

(கொழும்பு)

வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து தமிழர் பிரதேசங்களிலும் தேசிய கீதத்தினை தமிழில் பாடுவது மிகவும் சிறந்ததாக அமையும் எனவும் இனிவரும் காலங்களில் நான் இங்கு வருகை தரும் போது தமிழிலோ, ஆங்கிலத்திலே தான் பாடவேண்டும் என கௌரவ சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவுத் தொகுதியினை கௌரவ சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன நேற்று நாடாவினை வெட்டி திறந்து வைத்ததோடு அதற்கான திரை நீக்கத்தினையும் செய்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன மற்றும் ஐ.தே.கட்சி பாராளுமன்ற

23ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலில் போட்டியிடுமாறு

# மக்கள் வேண்டுகோள் விடுத்தால் அதனை புறக்கணிக்க முடியாது

## -மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்தால் என்னால் அதனை புறக்கணிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கார்டியனிற்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

நீங்கள் பொறுத்திருந்து பாருங்

23ஆம் பக்கம் பார்க்க

# நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற யாழ்ப்பாண இளைஞன் உயிரிழப்பு



மஸ்கெலியா மவுஸாக்கலை நீர்தேக்கத்தில் நீராடச் சென்ற யாழ். இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

# சோமவன்ஸ இராஜினாமா

(கொழும்பு)

ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அக்கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் அதன் கொள்கைகளை மாற்றுவதற்கு முன்வரவில்லை. அத்தோடு கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்கு ஜே.வி.பி தவறியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள

23ஆம் பக்கம் பார்க்க

# மீள்குடியேற்ற காணிகளில் இராணுவ முகாம்களால் அச்சம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மூன்றாம் கட்டமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பகுதியில் 100 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டிருக்கின்ற இரண்டு இராணுவ முகாம்களையும் அகற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பொது மக்களுடைய வாழ்விடமாகிய வலிகாமம் வடக்கின் 6400 ஏக்கர் காணிகள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது.

அங்கிருந்து வெளியேற்றப்பட்ட பொதுமக்கள், இருப்பதற்கு நிரந்தர இடமின்றி பிறருக்குச் சொந்தமான பொதுக்காணிகளில் கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

23ஆம் பக்கம் பார்க்க

# மகிந்தவை பிரதமர் வேட்பாளராக போட்டியிட வைக்க கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யாரை பிரதமர்வேட்பாளராக நிறுத்துகின்றது என தீர்மானித்த பின்னரே அடுத்த கட்ட முடிவையெடுக்கப்போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று தங்காலையில் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அவரை பிரதமர் வேட்பாளராக போட்டியிடுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

விடுதலைப்புலிகளை தோற்கடித்த பெருமைக்குரியவர் என்பதால் சாதாரணநாடாளுமன்ற உறுப்பினராக மகிந்த ராஜபக்ஷ அரசியலில்

24ஆம் பக்கம் பார்க்க

# எமக்கு சாதகமான சூழ்நிலையில் அரசும் சர்வதேசமும் இருக்கின்றது

## சரியாக பயன்படுத்த தவறினால் பேரிழப்பு-சம்பந்தன்



(கொழும்பு)

சர்வதேசமும் உள்நாட்டு அரசாங்கமும் எமக்கு சாதகமாக இருக்கின்ற சூழ்நிலையில் அந்தச் சந்தர்ப்பங்களை நாம் சரியாகப் பயன்படுத்தத் தவறுவோமானால் நாம் பூச்சிய நிலைக்கே மீண்டும் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை திருகோணமலை நகர சபை மண்டபத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தலைமையில் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாவட்ட நிலைகள் பற்றி ஆராய்ந்து உடனடியாக அறிக்கையொன்றை ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மோட்டார் குண்டு மீட்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கூழாவடி பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரில் சனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியான கூழாவடி புகையிரத தண்டவாளத்துக்கு அருகில் இருந்தே இந்த குணடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சென்ற பொலிஸார் குறித்த பிரதேசத்தில் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து 231 படைப்பிரிவின் பொறியியல் இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு குண்டு பாதுகாப்பான முறையில் திராய்மடு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டது.

எவ்வாறு இப்பகுதியில் இந்த மோட்டார் குண்டு கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ-11)

## பஸ் குடைசாய்வு; 37 பேர் காயம்



(கொழும்பு)

மடுல்சீமை - பசறை வீதியில் நேற்று நண்பகல் தனியார் பஸ் ஒன்று குடைசாய்ந்ததில் 37 பேர் காயமடைந்துள்ளனர்.

குருவிகலயில் இருந்து பசறை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றே 4 ஆம் கட்டை பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 37 பேரும் பசறை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 23 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## குடும்ப அதிகாரம் இல்லாத அரசியல்


எதிர்காலத்தில் ஒருபோதும் குடும்பம் ஒன்றிடம் அதிகாரம் செல்லாத வகையில் அரசியலமைப்பில் திருத்தத்தை ஏற்படுத்தப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகையாளர்களுடன் இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் எந்தவொரு நாட்டுடனும் இலங்கைக்கு பகை இல்லை எனவும் அனைத்து நாடுகளுக்கும் நட்புக் கரம் நீட்டுவதாகவும் இதன் போது ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்துடன் தேர்தல் முடிவுகள் வெளியாகி சில நாட்களுக்கு தான் ஜனாதிபதி என்பதை உணரவே முடியவில்லை எனவும் அவர் இங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# ஒப்பனைக் கலைஞரின் மாயத்தோற்றங்கள்!



ஒப்பனைக் கலைஞ்ரஹைற கருச்சோ தன்னுடைய கற்பனை மூலம் மனித உடல் மீது ஒப்டிகல் இல்யூஸன் (optical illusions) எனப்படும் மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதில் நிபுணராக உள்ளார். முப்பரிமாணத்தில் இவரது ஓவியங்கள பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்கின்றன. உலகம் முழுவதும் இவருக்கு ஆதரவு பெருகி வருகிறது.

கழுத்தில் கறுப்பு மையைப் பூசி, பின்பக்கமும் கறுப்புத் துணியைக் கட்டிவிட்டால் கழுத்து இல்லாத உடல் போல் மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது.

அதேபோல், கழுத்தில் ஸ்பிரிங்போன்று வரைந்துவிட்டால், ஸ்பிரிங்கில் தலை நிற்பது போல மாயத் தோற்றத்தைத் தருகிறது.

மூடிய கண் மீது, பச்சை வண்ண திறந்த கண்ணை வரைந்தால் அது வேறொரு விதமான தோற்றத்தைத் தருகிறது. அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு இப்படி மாயத்தோற்றங்களை உருவாக்கலாம் என்கிறார் ஹைறகரு. (செ-11)


### பதவி வெற்றிடம்

யாழ் நகரில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Computer Assistant
- Sales Boys & Sales Girls
- Electronic Technision

நேர்முகத்தேர்வு-ஞாயிற்றுக்கிழமை (19. 04. 2015)
நேரம் - 9 am - 12 pm
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 0212226807
இல. 26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(090)


## மரண அறிவித்தல்



### கலாபூசணம் பொன்னுத்துரை

**(ஓகன் மாஸ்டர், யாழ்.போதனா வைத்தியசாலையின் ஓய்வுநிலைப் பரிசாரகர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கலாபூசணம் பொன்னுத்துரை (ஓகன் மாஸ்டர், யாழ்.போதனா வைத்தியசாலையின் ஓய்வுநிலைப் பரிசாரகர்) 16.04.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - சோதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகன் - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பிறேமலதாவின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணகுமாரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, அம்பலம், நேசமலர் மற்றும் தியாகராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விதுஷிகா, கஜானன், சுவேதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 17.04.2015 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு 186, ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர் (093)


## சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்
## CENTRE FOR CHILD DEVELOPMENT
## புதிய அங்கத்தவர் இணைவு

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் ஸ்ரீலங்கா அரசின் அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதோர் அரச சார்பற்ற நிறுவனமாகும். சிறுவர்களின் நலன்களை மையமாகக் கொண்டு 1997 இல் ஆரம்பிக்கப்பட்ட CFCD யானது சிறுவர்களின் அபிவிருத்தி கருதி பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்காகவும் செயற்பட வேண்டி ஏற்பட்டது. எமது நிறுவனம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்களின் நலன் சார்ந்து பணியாற்றி வருகிறது.

எமது பிரதேசங்களில் உதவி தேவைப்படுகின்ற பல ஆயிரம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களையும் அக் குடும்பங்களில் உள்ள சிறுவர்களையும் நம்பிக்கையுடன் செயல்பட வழிகாட்ட வேண்டிய பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததே.

எமது இயக்குநர் சபையானது இப்பணியில் அதிக அளவிலானவர்கள் ஈடுபட வேண்டும் என்று கருதுகின்றது. இதன் ஓர் அங்கமாக எமது பொதுச் சபைக்கான அங்கத்துவத்தை அதிகரிப்பதற்காக தீர்மானித்துள்ளது. கௌரவம், பணம், பதவி என்பவற்றுக்கப்பால் அல்லல்படுகின்ற எமது மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற விரும்புவர்கள் பொதுச்சபை அங்கத்தவர்களாக இணைந்துகொள்ள முடியும்.

இதன் மூலம் சமூகத்தில் தீர்வுகாண வேண்டிய அவலங்களை அறியக் கூடிய வாய்ப்புக்களையும் அனுதாபப்படுவதும் உதவுவதும் மட்டும் எமது பணியல்ல, உதவி பெறுபவர் நிலைபேறான அபிவிருத்தியடைய வேண்டியதே எமது இலக்கு என்பதை உணர்ந்து உதவி தேவைப்படுபவர்களுக்கும் உதவி வழங்கத் தயாராக உள்ளவர்களுக்குமிடையே நம்பிக்கையான தொடர்பாளராக செயல்படவும் முடியும்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் அங்கத்தவராக இணைவதற்கு விரும்புவதற்கான காரணத்தை குறிப்பிட்டு, உங்கள் தொடர்பான தகவல்களுடன் 31.04.2015 முன்னதாக எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மேலதிக தகவல்களுக்காக 0212220483 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். உங்களது இணைவு உங்களுக்கு அர்ப்பணிப்பான சேவையில் ஈடுபட வாய்ப்பைத் தருவதுடன் CFCD யின் பணிகளை வலுப்படுத்தவும் அவலங்களுடன் வாழ்கின்ற எம்மவர்களின் மேலும் ஒரு பகுதியினர் நலம் பெறவும் வாய்ப்பைத் தரும் என நம்புகின்றோம்.

**நலமும் செழிப்பும் அறிவும் கொண்ட இளம் சமுதாயத்தை உருவாக்க ஒன்றுபட்டு செயல்படுவோம்**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்
இல. 254, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
E-mail : cfcdeve@gmail.com

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்

(092)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகலிடக்கோரிக்கையாளர்களை கம்போடியாவிற்கு மாற்ற முடிவு

(கொழும்பு)

**அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் சென்ற புகலிடக்கோரிக்கையாளர்களில், நவுறு தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் உள்ளிட்டோரை கம்போடியாவிற்கு மாற்றுவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இவர்களில் முதலில் தன்னார்வ அடிப்படையில் கம்போடியா செல்ல விரும்புவோரை அவுஸ்திரேலிய அரசு விமானம் மூலம் அனுப்பவுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலிய அரசுக்கும் கம்போடிய அரசுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்தே இந்த நடைமுறையை அவுஸ்திரேலிய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கான நிதியை அவுஸ்திரேலிய அரசாங்கம் செலவிடவுள்ளது.

அவுஸ்திரேலியாவிற்கு படகு மூலம் இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் புலம்பெயர்ந்து சென்றனர். இவர்களை அவுஸ்திரேலிய அரசு நவுறு தீவில் தங்க வைத்துள்ளது. இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரியவர்களே இவ்வாறு கம்போடியாவில் குடியமர்த்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சுதந்திரக்கட்சியின் வீழ்ச்சி ஆரம்பமாம்

### ரஞ்சித் டி.சொய்சா ஆரூடம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கிய நடவடிக்கைக்கு எதிராக எதிர்காலத்தில் பாரிய பதில் தாக்குதலை நடத்த போவதாகவும் சுதந்திரக் கட்சியின் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது எனவும் அந்த கட்சியின் இறக்குவானை தொகுதி அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் டி சொயசா தெரிவித்துள்ளார்.

கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களை நீக்கி விட்டு, ஆமாம் சாமிகளை மத்திய செயற்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க கட்சியின் தலைவர் எடுத்த தீர்மானத்தை பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர்.

இப்படியான கீழ்த்தரமான நடவடிக்கைகளினால், எமது முன்னோக்கிய பயணத்தை தடுத்து விட முடியாது.

உள்ளூராட்சி மட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை வந்து அமைச்சரவை அமைச்சர் பதவிகளை வகித்த பந்துல குணவர்தன, சாலிந்த திஸாநாயக்க, டி.பி. ஏக்கநாயக்க, எஸ்.எம். சந்திரசேன ஆகியோரை மத்திய செயற்குழுவில் இருந்து நீக்கி விட்டு, அரசியலில் அனுபவங்கள் குறைந்த ஹிரு ணிகா, சோலங்க ஆராச்சி போன்ற வர்களை நியமித்தது கேலிக்குரியது.

இப்படியான செயற்பாடுகள் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மண் பிட்டு செய்யும் விளையாட்டு வீடாக மாறிவிட்டது.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரிய வீழ்ச்சியின் ஆரம்பம் எனவும் ரஞ்சித் டி சொய்சா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## விநாயகர் முன்பள்ளியின் விளையாட்டுவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாலர்பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக்கழகச் செயலாளர் செ.ருவிந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடக்குமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.



சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்கினேஸ்வர வித்தியால அதிபர் சு.சிவானந்தம், தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி. த. சுபத்திராதேவி, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் எஸ்.பவளக்குமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## தொழிற்சாலையில் திடீர் தீவிபத்து

ராகலை - சூரியகாந்த தோட்டத்தில் உள்ள தேயிலை தொழிற்சாலையில் தீப்பரவல் சம்பவம் ஒனறு இடம்பெற்றது. தோட்டமுகாமையாளர் இதனை உறுதிப்படுத்தினார்.

நேற்று காலை 6 மணி அளவில் இந்த தீப்பரவல் ஏற்பட்டதாகவும், தோட்ட பொது மக்கள் இணைந்து அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் முகாமை யாளர் கூறியுள்ளார். மின்சார கசிவின் காரணமா கவே இந்த அனர்த்தம் இடம்பெ ற்றுள்ளது. (இ-5)

## ஆபத்து அதிகம்

யாழ். ஏ-9 வீதியில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள ரயில் கடவையில் பாதுகாப்பு கடவை வீதி சமிக்ஞை விளக்குகள் இரண்டு நாட்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் பயணிகளுக்கு அபாயத்தையும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக யாழ். பிரதம புகையிரத நிலைய அதிபர் ரி. பிரதீபனை தொடர்பு கொண்டு கேட்ட போது, சமிக்ஞை விளக்குகளை சரிசெய்வதற்கான உபகரணங்கள் இங்கு இல்லாததால் கொழும்பில் இருந்து எடுத்து சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் அதுவரை தமது பணியாளர்கள் அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வார்கள் என அவர் மேலும் தெரிவித்தா. (இ)

## இராசி பலன்

17.04.2015
(சித்திரை 04, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.12 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 7.01 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மீனம்:** பக்குவமாக நடந்து கொண்டு பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், குடும்பத்தினரிடம் முற்கோபத்தைக் குறைப்பது நல்லது.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும், பயணங்களால் பலன் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

**கடகம்:** சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** சுபசெய்திகள் வந்து சேரலாம் மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** நன்மைகள் நடைபெறும் நாள், விருந்தினர் வருகையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி


**ஆன்மீகம் 181**

மேலும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.... யாரும் உங்களுடைய செல்வத்தில் கை வைத்து உங்களுக்குப் பெயரளவிலான விதி கெட்டுப் போகக் காரணமாகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. எப்படியோ மக்கள் நம் செல்வத்தைத் திருடிக் கொண்டுபோக காத்துக் கொண்டிருப்பதாக ஒரு நிரந்தரமான பயத்துடன் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது நமது செல்வத்தை இழந்துவிடும் பயம்.

இந்த பயத்தில் நாம் நம்மைச் சுற்றி நிறைய சுவர்களை எழுப்பிக் கொள்கிறோம். இறுதியில் நாமே எழுப்பிய சிறையில் நாம் சிக்கிக் கொண்டு இருப்பதைக் காண்கிறோம். அதனால்தான் நான் கதவைத் திற, காற்று வரட்டும் என்று சொல்கிறேன். உயிர்ச்சக்தி உங்களைப் பாதுகாக்கும் என்பதில் நம்பிக்கை வையுங்கள். மிகவும் தெளிவாக இருங்கள்.... உங்கள் வீடுகளைப் பூட்டி வைக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை! உடல் சார்ந்த நிலையில் உங்கள் வீடுகளைப் பூட்டி வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. மனம் சார்ந்த நிலையில் உங்கள் மனதை வாட்டிக் கொண்டிருக்கும் பூட்டி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள் என்று சொல்கிறேன். அவ்வளவுதான்.

## பயத்தை எதிர்கொள்ளல்

ஒரு உதாரணத்திற்கு நீங்கள் இரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்



வோம். நீங்கள் வெட்டியில் ஒருவாறு நிலைபெற்றவுடன் என்ன செய்கிறீர்கள்? உங்களுக்கு அருகில் இருப்பவரிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பிக்கிறீர்கள். அவர்கள் எங்கி ருந்து வருகிறார்கள் என்று கேட்கி றீர்கள். அவர்கள் என்ற மதமாக இருப்பார்கள் என்று கண்டுபிடிக்க முயற்சி செய்கிறீர்கள். அவர்களுடைய பின்னணியைப் பற்றி கேள்வியைக் கேட்கிறீர்கள். இப்படிப்பல, ஏன்? உங்களு க்கு அவர்களைப் பற்றிய விபரங்களில் உண்மையிலேயே ஆர்வம் இருப்பதாலா? இல்லை!

ஏனெனில் நீங்கள் அவர்களை தெரியாதவையாகப் பார்க்கிறீர்கள். அவர்களைப் பற்றிய இந்த விடயங்கள் தெரிந்தால் உளவியல்பூர்வமாக உங்களுடைய தெரியாதவற்றைப் பற்றிய பயம் குறைகிறது; நீங்கள் இயல்பாக இருக்கலாம், அவ்வளவுதான்.

நீங்கள் ஒரு ஹிந்துவாக இருந்து, அவர்களும் ஹிந்துவாக இருந்தால் நீங்கள் நிம்மதியடைகிறீர்கள். நீங்கள் ஹிந்துவாக இருந்து அவர்கள் முஸ்லிமாக இருந்தால் நீங்கள் மன நிம்மதியற்றும் அச்சமாகவும் உணர்கிறீர்கள்; அவர்களை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறீர்கள். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




# சமைப்போம் சுவைப்போம்

## ஓட்ஸ் டயட் ரொட்டி



**தே.பொருட்கள்:**

ஓட்ஸ்-3 கப்

ஆட்டா மா-1 கப்

உப்பு -தே.அளவு

**செய்முறை:**

ஓட்ஸை நன்கு மிக்ஸியில் தண்ணீர் சேர்க்காமல் பொடித்துக் கொள்ளவும். பிறகு அத்துடன் ஆட்டா மாவையும் சேர்த்து தேவை யான அளவு உப்பு சேர்த்து, வெந்நீர் ஊற்றி சப்பாத்தி மாவு பதத்திற்குப் பிசையவும். (கவனிக்க: சாதாராணமாக சப்பாத்தி மாவுக்கு ஊற்றும் நீரைவிட சிறிது அதிகமாக ஊற்றி பிசைய வேண்டும்.) பிசைந்த மாவை, ஒரு மூடி இட்ட பாத்திரத்தில் போட்டு அரை மணி முதல் இரண்டு மணி நேரம் வரை ஊற வைக்க வேண்டும். பிறகு மெல்லிய சப்பாத்திகளாக இட்டு தோசை கல்லில் போட்டு சப்பாத்தி செய்ய வேண்டும். சூடாக சாப்பிடுவதற்கு மிகவும் சுவையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி, மதுரை விமான நிலையங்களிலும் ஒன் அரைவல் விசா வழங்கப்பட வேண்டும்

## ராதாகிருஷ்ணன் கோரிக்கை

(கொழும்பு)

**இந்தியாவினால் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒன் அரைவல் விசாவினை தமிழகத்தில் உள்ள அனைத்து விமான நிலையங்களிலும் வழங்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.ராதா கிருஷ்ணன் இந்தியத் தூதரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இலங்கையர்கள் பெரும்பாலும் திருச்சி, மதுரை ஆகிய விமான நிலையங்கள் ஊடாகவே இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்கின்றனர் எனவும் கல்வி இராஜாங்க அமைச்சர் இந்தியத் தூதர் வை.கே. சிங்ஹாவிடம் தெரிவித்தார்.

ஆகவே இந்த இரண்டு விமான நிலையங்களிலும் இலங்கையர்களுக்கு ஒன் அரைவல் விசா வசதியினை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

புதுவருட தினத்தன்று இந்தியாவினால் இலங்கையர்களுக்கு ஒன் அரைவல் விசா வசதியினை புதுடில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம், கொச்சின், கோவா ஆகிய விமான நிலையங்களில் இந்த நடைமுறை அமுல்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் சென்னைக்கான சேவையை ஆரம்பிப்பு

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் கொழும்பிலிருந்து சென்னைக்கான தனது விமான சேவையை நான்காக அதிகரித்துள்ளது.

நேற்று முதல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை சென்னைக்கு தினமும் நான்கு சேவைகளை வழங்கவுள்ளது. பயணிகளின் நலன் கருதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை இந்தியாவிற்கும் இலங்கைக்குமான சேவையை 86 ஆக அதிகரித்துள்ளது.

தென்னிந்தியாவின் முக்கிய நகரமான சென்னைக்கு சென்று வரும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் அந்நகருக்கான விமான சேவையை அதிகரித்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா புதுவருடத்தன்று இலங்கையர்களுக்கான ஒன் அரைவல் விசா வசதியை சென்னை விமான நிலையத்தில் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இந் நிலையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தனது புதிய விமான சேவையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இந்தியாவிற்கான

# ‘ஒன் அரைவல்’ விசா புத்தாண்டு முதல் அமுல்

இந்தியா செல்லும் இலங்கை பயணிகளுக்கு விமான நிலையத்திலேயே விசா வழங்கும் On Arrival விசா நடைமுறை கடந்த 14ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த மாதம் இலங்கை வந்தபோது விசா தொடர்பாக வழங்கிய உறுதிமொழிக்கு அமையவே இந்த சந்தர்ப்பம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சென்னை, திருவனந்தபுரம், புதுடில்லி, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத், பெங்களூர், கொச்சின் மற்றும் கோவா ஆகிய 9 விமான நிலையங்களில் இலங்கையர்கள் 30 நாட்களுக்கு தங்கக் கூடியவாறு விசா பெற்றுக் கொள்ள முடியும்.

அதாவது வழமையிலுள்ள விசா வழங்கும் சேவைக்கு மேலதிகமாகவே இந்த நடைமுறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இளைப்பாறுவதற்கு, சுற்றிபார்ப்பதற்கு, நண்பர்கள் அல்லது உறவினர்களை பார்வையிடுவதற்கு, குறுகிய கால மருத்துவ சிகிச்சைகளுக்கு சிறிய வியாபார நோக்கம் ஆகியவற்றுக்காக சாதாரண கடவுச்சீட்டு வைத்திருக்கும் எந்தவொரு இலங்கைப் பிரஜையும் விமான நிலையத்தில் வைத்து விசாவை பெற்றுக்கொள்ள முடியும்.

எனினும் இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுகளை வைத்திருக்கும் இலங்கைப் பிரஜைகளும் பாகிஸ்தானை பிறப்பிடமாகக் கொண்ட இலங்கை பிரஜைகளும் விமான நிலையத்தில் விசா பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் உள்வாங்கப்பட மாட்டார்கள்.

மேலும் இதற்கான விண்ணப்பதாரி இந்தியாவில் தனது வீட்டையோ அல்லது தொழிலையோ கொண்டிருக்க முடியாது. விண்ணப்பதாரி இந்தியாவை சென்றடைந்த நாள் முதல் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்காவது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை தம்வசம் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இந்தியா செல்வதற்கு முன்னர் https://indianvisa online.gov.in/visa/tvoa.html இணையத்தள முகவரியூடாக விண்ணப்பம் செய்து ETA (Electronic Travel Authorizition) இணை பெற்றிருப்பதுவும் இதற்கு அவசியமாகும்.

இவ்விசாவானது இந்தியாவுக்குள் சென்ற நாளிலிருந்து 30 நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகும். இந்த விசாவினை நீடிக்க முடியாது.

இதனை பிறருக்கு மாற்றம் செய்ய முடியாது. பாதுகாக்கப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட இடங்களுக்குள் இந்த விசாவுடன் பிரயாணம் செய்ய முடியாது.

பெங்களூர், சென்னை, புதுடில்லி, கோவா, ஐதராபாத், கொச்சி, கொல்கத்தா, மும்பை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய 9 விமான நிலையங்களைத் தவிர்ந்த ஏனைய விமான நிலையங்களுக்கூடாக செல்ல முடியாது.

இருப்பினும் இந்தியாவின் எந்தவொரு குடியகல்வு சோதனை சாவடிக்கூடாகவும் வெளிவர முடியும்.

விண்ணப்பதாரி விமான பயணச் சீட்டு, இந்தியாவில் தனது செலவுக்கான பணம் ஆகியவற்றுடன் ரிக்கட் பிரதியொன்றினையும் தன்னுடன் வைத்திருத்தல் வேண்டும்.

இந்த புதிய நடைமுறைக்கு விசேட கொடுப்பனவாக 60 அமெரிக்க டொலர்களும் இடைப் பரிமாற்ற சேவைக்காக 2 அமெரிக்க டொலர்களையும் செலுத்த வேண்டும். விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கு முன்னர் இந்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்த கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# அபே குணவர்த்தன நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில்இருந்து பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன நீக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கையொப்பமிட்டகடிதம் ஒன்றின் மூலம் இதனை தனக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழுவில் இருந்து பந்துல குணவர்த்தன, சாலிந்த திஸாநாயக்க, ரீ.பீ.ஏக்கநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 47 செவ் 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSC, MSC லண்டன்<br>தொ.இ: B/536 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 51 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.COM, HNDA/ அரச தொழில்<br>தொ.இ: G/950 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L சுவிஸ் PR<br>தொ.இ: B/538 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 8 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC, MBA கனடா PR<br>தொ.இ: G/951 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: B/540 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 30 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/960 |
| பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/542 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Chartered accountancy<br>தொ.இ: G/961 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# விபத்தில் சிறுவன் காயம்

(கரணவாய்)

பருத்தித்துறை கொத்தடி பகு தியில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் 9 வயதுச் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளான்.

கடந்த செவ்வாய்க் கி ழமை இடம்பெற்ற விபத்தில் நவநீதன் நிறஞ்சன் என்ற சிறுவனே இவ்வாறு விபத் தில் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளான். (இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் வடுக்களை மறந்து தன்னம்பிக்கையுடன்

# மீண்டெழ வேண்டும் வடக்குவாழ் மக்கள்

## யாழ். அரச அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண மக்கள் கடந்த 30 வருட கால போரினால் தன்னம்பிக்கை இழந்தவர்களாக உள்ளனர் என தெரிவித்துள்ள யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் வடுக்களை மறந்து தன்னம்பிக்கை கொண்ட சமூகமாக மீண்டெழ வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.**

ஏசியா பவுண்டேசனின் நிதியுதவியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 60பெண் தொழில் முயற்சியாளர்களிற்கான பயிற்சி வழங்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீட விரிவுரை மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலத்தில் நடைபெற்ற போரினால் தொழிற்சாலைகள் அழிவடைந்தும் இடை நிறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு இயங்காமல் இருந்த தொழிற்சாலைகள் மீள இயங்க முடியாத நிலை தற்போதும் வடக்கில் காணப்படுகின்றன.



இதன் காரணமாக இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலையில்லாப் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. 30 வருட போரினால் நாம் அனைவரும் தன்னம்பிக்கை இழந்த மக்களாக உள்ளோம். இதனால் எமது சமூகம் பல பின்னடைவுகளினையும் எதிர்நோக்கி வருகின்றது. கடந்த கால போரின் காரணமாக முகாம்களில் எமது மக்கள் இருந்து வந்துள்ளனர். இதனால் சுறுசுறுப்பற்ற மக்களாக எம் மக்கள் உள்ளனர்.

30 வருட காலமாக வடக்கு மக்களின் முயற்சிகள் முடக்கப்பட்டிருந்தன. அவ்வடுக்களினை மறந்து துயரங்களில் இருந்து மீண்டெழுந்து நம்பிக்கை கொண்ட சமூகமாக நாம் உருவாக வேண்டும்.

முல்லைத்தீவில் கணவனை இழந்த பெண்கள் சிறந்த முயற்சியாளர்களாக உள்ளனர். இவ்வாறு ஏனைய மாவட்ட பெண்களும் முயற்சியுடையவர் களாக இருக்க வேண்டும்.

இம் முயற்சியாளர்களினை வளர்க்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. எனவே நாம் அனைவரும் அவர்களின் முயற்சிகளில் பங்காளிகளாக இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பொருட்கள் கையளிப்பு

(மானிப்பாய்)

நாம் நண்பர்கள் அமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் உதவி வழங்கும் செயற்றிட்டத்திற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

25 குடும்பங்களுக்கு வழங்குவதற்குரிய உலர் உணவுப் பொதிகளை அமைச்சர் நாம் நண்பர்கள் அமைப்பினரிடம் கையளித்துள்ளார்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட பொருட்கள் சண்டிலிப்பாய் மற்றும் பொம்மைவெளி பகுதிகளைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே. சிவராஜா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்விலேயே கையளிக்கப்பட்டிருந்தன. (இ-3-23)




## ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம் 6 மாணவர்களுக்கு சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அழைக்கப்பட்ட ஆசிரியர்களை உரிய நேரத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ-3-29)

## ஆறுதல் அரங்கில் வரதர் உரை

கருத்தூண்டல்களம் அமைப்பின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 19ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் வைமன் வீதியில் உள்ள "ஆறுதல்" அமைப்பின் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள்முதலமைச்சர்அ.வரதராஜப்பெருமாள் "முதலமைச்சராக எனது அனுபவம்" என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

அதைத் தொடர்ந்து அவ்விடயத்தை ஒட்டி நிபுணத்துவக் கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## யாழில் 12.5 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில்

### வடக்கு விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தில் 2015 ஆம் ஆண்டு மாகாண சபையால் குறித்தொதுக் கப்பட்ட நிதியின் கீழ் 12.5 மில்லியன் ரூபாய் செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள் ளப்படவுள்ளதாக வடக்குமாகாண விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கீ. ஸ்ரீபாலசுந்தரம் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய திணைக்களத்தால் பல் வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த வருடம் 23 வகையான வாழ்வாதார அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத் திட்டமானது உற்பத்தித்திறனை மேம்படுத்தல், சந்தைப்ப டுத்தலுக்கு வசதி ஏற்படுத்தல், உற் பத்தி செய்யும் பயிர்களின் விஸ்திரத்தை அதிகரித்தல், திணைக்களத்தின் திறன் விருத்தி, சூழல் மேம்பாடு ஆகிய 5 பிரதான தலைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

## இடமாற்றத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தியாகும்

### வடக்கு பிரதம செயலாளர் உறுதி

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாணத்தில் 7 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்த உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் என வடக்கு மாகாண சபை பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் ஒழுங்கு முறையில் நடைபெறவில்லை என்று பல உத்தியோகத்தர்களால் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் சேவை செய்வதற்கு இளையோர் முன்வர வேண்டும் . யாழ். மாவட்டத்தில் மட்டும் அனைவரும் பணியாற்ற வேண்டும் என விரும்பினால் அது சாத்தியமற்ற விடயமாகும்.

வருடாந்த இடமாற்றம், அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், முகாமைத்துவ உதவி யாளர்கள், சிற்றூழியர்கள், சாரதிகள் போன்ற



பணியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த இடமாற்றம் இந்த மாதம் 20 ஆம் திகதி அமுலுக்கு வரவுள்ளது. ஒவ்வொருவருடைய பிரச்சினைகளும் உரிய முறையில் அறியப்பட்டு அவர்களுடைய தேவைகள் படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்சீரணிஅருள் மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற் சவ விஞ்ஞாபனம் இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவி ழாவும் மறுநாள் 3 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ரத ஆரோகணமும் இடம் பெற்று மறுநாள் தீர்த்தத் திருவி ழாவும் இடம்பெறும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (இ)




ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 60 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி இந்திய அரசின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவம் மற்றும் வணிகபீட விரிவுரை மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பீடாதிபதி தி.வேல்நம்பி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ்.இந்திய துணைத்தூதுவர் என்.நட்ராஜூக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கைத்தமிழர் பிரதிநிதிகள் அவுஸ். அமைச்சருடன் சந்திப்பு



இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப், சென்னையில் நேற்று முன்தினம் இலங்கை தமிழர்களின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சென்னையில் பல்வேறு சந்திப்புகளை மேற்கொண்ட அவர், இலங்கை தமிழ் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக தமது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தைகள் ஆக்க பூர்வமாக அமைந்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)




# தேர்தல் முறைமை மாற்றம் குறித்து இரண்டு யோசனைகள் முன்வைப்பு!

## நீதியமைச்சர் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக இரண்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார.**



இலங்கையில் புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறும் நோக்குடன் அரசாங்கம் அக்கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

இந்நிலையில், இந்தத் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட இரண்டு யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பெரும்பாலான கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாறு முன்வைக்கப்பட்ட இரு யோசனைகளிலும் முதலாவது யோசனையின்படி, நாடாளுமன்றத்துக்கு தொகுதி வாரியாக 125 ஆசனங்களும், மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் 75 ஆசனங்களும், தேசியப் பட்டியல் மூலம் 25 ஆசனங்களும் தெரிவு செய்யப்படும்.

இரண்டாவது யோசனையின் பிரகாரம், தொகுதி வாரியாக 150 ஆசனங்களும், மாவட்ட விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் 75 அல்லது 60 ஆசனங்களும், தேசியப் பட்டியல் மூலம் 25 அல்லது 15 ஆசனங்களும் தெரிவு செய்யப்படும்.

இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் காணப்படும் இணக்கப்பாட்டுக்கு அமைய, இந்த இரண்டு யோசனைகளில் ஏதாவது ஒன்று நாடாளுமன்றத்தில் பிரேரணையாக சமர்ப்பிக்கப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை நடைபெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாஷ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அபிவிருத்திதிட்டங்களுக்கு 173 மில்லியன் ரூபா நிதி முன்மொழியப்பட்டுள்ளது

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் இந்த வருடம் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்காக மாகாணசபையால் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 173 மில்லியன் ரூபா நிதி முன்மொழியப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழுள்ள நான்கு விவசாயம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களங்களுக்கு 73 மில்லியன் ரூபாவும் கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திற்கு 42 மில்லியன் ரூபாவும் கூட்டுறவு அபிவிருத்திக்கு 6 மில்லியன் ரூபாவும் விவசாய திணைக்கள வீதி அபிவிருத்திக்கு 10 மில்லியன் ரூபாவும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு 42 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்குரிய அனுமதி கிடைக்கப்பெற்றதும் அனைத்து திணைக்களங்களின் ஊடாகவும அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-5)

# தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இல்லையென்றால் புரட்சிதான்

## மஹிந்தானந்த எச்சரிக்கை

முன்னாள் அமைச்சர்களுக்கு, சுதந்திரக் கட்சி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காவிட்டால் மாற்று தீர்மானத்தை எடுக்க நேரிடும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியில் தான் உட்பட சில உறுப்பினர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காது போனால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் புரட்சி ஒன்று ஏற்படும் எனவும் தவறான தீர்மானங்களை எடுத்தவர்கள் அதனை அனுபவிக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெயர் குறிப்பிடாத சிலர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு முன்வைக்கும் முறைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கவில்லை என்றால் அது ஜனநாயகமாக இருக்காது.

நாங்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டோம். அவருக்கு ஆதரவாக குரல் கொடுத்தோம் என்பதற்காக தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படாது போனால், போட்டியிட வாய்ப்பு கிடைக்காதவர்களை இணைத்து கொண்டு செய்ய முடிந்த சகலவற்றையும் செய்வோம்.

நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள். இதனால, நாங்கள் அந்த கட்சியின் ஊடாகவே போட்டியிடுவோம். ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது எனக் கூறும் சிலர் கடந்த காலங்களில் தவறுகளை செய்து அரசு அபராதம் செலுத்தியவர்கள்.

எனினும் அவர்களின் பெயர்களை நான் குறிப்பிடப் போவதில்லை. அப்படியானவர்களும் இவ்வாறு பேசுவதற்கு தார்மீக உரிமையில்லை. போட்டியிடும் வாய்ப்பு வழங்காவிட்டால் அன்று பார்த்து கொள்ளலாம்.

அப்படி நடந்தால், அது நாட்டுக்கு பெரும் பாதிப்பாக அமையும். அதன் பிரதிபலன்களை அவர்கள் அனுபவிக்க நேரிடும். யார் எப்படியான அழுத்தங்களை கொடுத்தாலும் நாங்கள் அரசியலில் ஈடுபவதை நிறுத்த போவதில்லை.

போட்டியிட வாய்ப்பு கிடைக்காவிட்டால், மாற்று வழிகள் உள்ளன.



ஒன்றை கூற விரும்புகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து செல்ல முடியாது. அப்படி செல்ல போவதுமில்லை.

மகிந்த ராஜபக்ஷவுக்கு பணியாற்றியதன் காரணத்தினால், விமல் வீரவன்ச, ரோஹித்த அபேகுணவர்தன, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கு எதிராக தாக்குதல் தொடுக்கின்றனர்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் மீதும் தாக்குதல் தொடுத்தனர். அவரகள் அமைச்சு பதவிகளை பெற்றுக் கொண்டதால், கோப்பு கீழே சென்றுவிட்டது எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்தார். (இ-5)

## விருந்துக்காக மகிந்த வீட்டில் 57எம்.பிக்கள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கால்டன் வீட்டுக்கு 57 பாராளுமன்ற உறுப்பினர்கள் விருந்துக்கு சென்றுள்ளனர்.

இதன் போது பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்மன்பில பிரதேச சபை மற்றும் உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, பந்துல குணவர்தன, குமார வெல்கம, தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச, ரி.பீ.ஏக்கநாயக்க, ஜீ.எல்.பீரிஸ், சாலிந்த திசாநாயக்க, மகிந்தானந்த அளுத்கமகே, காமினி லொக்குகே, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உள்ளிட்டோர்களும் முன்னாள் ஜனாதிபதியை சந்திக்க சென்றுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது முன்னாள் ஜனாதிபதியுடன் அரசியல் தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு புது வருட வாழ்த்துக்களை தெரிவிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணி கட்சி பிரதிநிதிகளும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு சபை நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையில் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வன்னி யுத்தம் நடைபெற்று முடிந்து மக்கள் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் கூட்டுறவு சட்டவிதிகளுக்கும் கூட்டுறவு கொள்கைகளுக்கும் முரணான வகையில் அரசியல் அதிகாரத்தின் அடிப்படையில் நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

ஆனால் தற்போதைய சூழலில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் பொதுச் சபை பிரதிநிதிகள் ஒன்று கூடி இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொண்டனர்.

இதில் தலைவராக அ.கேதீஸ்வரன், உப தலைவராக க.செல்வராசா ஆகியோர் தெரிவாகினர். நிர்வாக உறுப்பினர்களாக 7 பேர் தெரிவாகினர். (2-277)

# மின்சாரம் வழுங்குவதற்கான வேலைகள் நடைபெறவில்லை

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம்

(மல்லாவி)

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் முழங்காவில் வைத்தியசாலையிலிருந்து இராஜபுரம் குடியிருப்பு நோக்கி செல்லும் வீதியில் வசிக்கின்ற குடும்பங்கள் மற்றும் முழங்காவில் 31 ஆம் கட்டைப்பகுதியில் வாழ்கின்ற குடும்பங்கள் ஆகியோருக்கு இதுவரை மின்சாரம் வழங்குவதற்கான முன்னாயத்த வேலைகள் எதுவும் நடைபெறவில்லையென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பூநகரி-முழங்காவில் பிரதேசத்திற்கு கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மின்சாரம் வழங்கப்பட்டது.

இந்த மின்சார விநியோகம் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், முழங்காவில் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்கப்பட்டது.

அதன்பின்னர் 2014 ஆம் ஆண்டு பிற்பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று நடப்பாண்டின் முற்பகுதியில் அதிகமான குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில் முழங்காவில் இராஜபுர குடியிருப்பு வீதியில் வசிக்கின்ற 50 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் மற்றும் முழங்காவில் 31 ஆம் கட்டைப்பகுதியில் வசிக்கின்ற 25 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான முன்னாயத்த வேலைகள் எதுவும் நடைபெறவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால்இக் குடியிருப்பில் வசிக்கின்ற மாணவர்கள் இரவு நேரக் கல்வி நடவடிக்கையில் ஆர்வம் காட்ட முடியாதுள்ளதாக பெற்றோர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு தமக்கான மின்சார இணைப்பு கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (2-15)

# வீதியை விட்டு விலகிய வாகனம் மரத்துடன் மோதி தடம்புரண்டது

## 8 மாத குழந்தை உட்பட ஐவர் படுகாயம்

(முள்ளியவளை)



தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான பிக்கப் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதித் தடம்புரண்டது. இதில் பயணித்த 8 மாத குழந்தை உட்பட ஐந்து பேர் படுகாயம் அடைந்த நிலையில் முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நான்குபேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் முள்ளியவளை வவுனியா வீதியின் 6 ஆம் கட்டைப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் முன்பாக நடைபெற்றுள்ளது.

இதில் வாகன சாரதியான அ.மோகன் (வயது-38), யு.என்.ஹபிராட் நிறுவன மாவட்ட முகாமையாளர் எஸ்.மாறன் (வயது-42), முல்லைத்தீவு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப்பிரிவில் கடமையாற்றும் அதிகாரி ஜெ.கோகுலன் (வயது35), மனைவி திருமதி கோ.அனித்தா, 8 மாத குழந்தையான கோ.பனிச்சன்நிலா ஆகியோர் படுகாயம் அடைந்தவர்களாவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

யு.என்.ஹபிராட் நிறுவன வாகனத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப்பிரிவில் கடமையாற்றும் அதிகாரியொருவர் விடுமுறை நிமிர்த்தம் சொந்த ஊருக்கு சென்று விட்டு தனது குடும்பத்தினருடன் நேற்றுக்காலை முல்லைத்தீவிற்கு திரும்பியுள்ளார்.

இதன்போது ஆறாம் கட்டை பகுதியில் வாகனம் பயணித்தவேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரமொன்றுடன் மோதி தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் வாகனத்தில் பயணித்த ஐந்து பேரும் சம்பவ இடத்தில் படுகாயம் அடைந்தனர்.

8 மாதக்குழந்தை வாகனத்திலிருந்து வெளியே 15 மீற்றர் தூரம் வரை தூக்கி வீசப்பட்டு பின்னர் அருகில் இருந்த காணியினுள் இருந்து மீட்கப்பட்டது.

இதனையடுத்து ஐந்து பேரும் மாஞ்சோலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் எஸ்.மாறன் மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குழந்தை உட்பட நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்விபத்து சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-302)




# கிளிநொச்சி சந்தையில் லீக்ஸ் விலை அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் லீக்சின் விலை நேற்றையதினம் சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த வாரத்தில் ஒரு கிலோ 160 ரூபா தொடக்கம் 180 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட லீக்ஸ் நேற்றையதினம் 600 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன் கிளிநொச்சி பொதுச்சந்தையில் லீக்ஸ் மிக அரிதாகவே காணப்பட்டது.

தமிழ்.சிங்கள புத்தாண்டையொட்டி தம்புள்ளை சந்தை தொடர்ச்சியாக நேற்று வரை மூடப்பட்டு வடக்கு பகுதிக்கான மரக்கறி வரத்து இல்லாமல் இருந்தது.

இதனையடுத்து நேற்றையதினம் கிளிநொச்சி சந்தையில் லீக்சின் விலை சடுதியாக அதிகரித்து காணப்பட்டதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (2-271)

# வதிவிட செயலமர்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 12 கல்வி வலயங்களில் கடமையாற்றுகின்ற முறைசாராக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக்கால பயிற்சி ஆலோசகர்கள், தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் ஆகியோருக்கான இரு நாட்கள் கொண்ட வதிவிடச் செயலமர்வொன்று மாணவர்களுக்குரிய தொழில் வழிகாட்டல் கையேடு தயாரித்தல் எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) க.சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி தரங்களில் காணப்படும் கல்வி அதிகாரிகளுக்கு இச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை, நாளை சனிக்கிழமை ஆகிய இரு நாட்கள் காலை 8.30-இரவு 8.30 மணிவரை நடை பெறவுள்ளது.

இச் செயலமர்வு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கலை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வதிவிடச் செயலமர்வு தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தல் விடுத்து இச் செயலமர்விற்குரிய முன்னாயத்தங்களுடன் உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)



மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் நற்கருணை நாதர் ஆலயம் நேற்று காலை 7 மணியளவில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

75ஆவது பிறந்த தினத்தை நேற்று கொண்டாடிய மன்னார் மறை மாவட்ட ஆயரையும் அவருடன் இணைந்து திறப்பு விழாவில் கலந்து கொண்ட திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, பதுளை ஆயர் வில்சன் பெர்னாண்டோ, மட்டக்களப்பு ஆயர் பொன்னையா ஜோசப், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், கண்டி ஆயர் வியன்னி பெர்னாண்டோ ஆகியோர் விழாவின் போது ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை விடப்பட்ட வாகனங்கள் பாடசாலை காணியில் குவிப்பு

**(முல்லைத்தீவு)**

**மு/ ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்துக்கு சொந்தமான காணியில், யுத்தத்தின்போது கைவிடப்பட்ட வாகனங்கள் குவிக்கப்பட்டுள்ளமையால் பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அதன் ஆரம்பப்பிரிவு, ஆறுமுகம் வித்தியாலயம் என தனிப் பாடசாலையாக உருவானது.

205 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்ற னர்.

கைவிடப்பட்ட வாக னங்கள் குவிக்கப்பட்டுள்ளமையால், புதிய கட்டடங்களை நிர்மாணிக்க முடி யாதுள்ளது.

கைவிடப்பட்ட வாகனங்களில் குடிகொண்டுள்ள பாம் புகள், பாடசாலை க்குள் நுழைகி ன்றன.

இதனால் ஆசி ரியர்களும் மாண வர்களும் அச்சத்துடன் இருப்பதாக பாட சாலை நிர்வாகம் கூறியுள்ளது.

இது தொடர்பில், துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவிக்கையில்,

"பாடசாலையில் கைவிடப்பட்ட வாகனங்கள் குவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், இராணுவத்தினர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலம் கடந்த இரு ஆண்டுகளாக தெரியப்படுத்தியுள்ளோம்.

இதுவரையில் கைவிடப்பட்ட வாகனங்கள் அகற்றப்படவில்லை"

"வாகனங்கள் அகற்றப்படாமையால் பாடசாலையை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

பாடசாலைக்கு புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு அனுமதி கிடைத்தும், அவற்றை நிர்மாணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது" என்று அவர் மேலும் கூறினார்.(2)

## தாதியர் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

தாதியர் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான தகைமையாக க. பொ. த.சாதாரண தரத்தில் 5 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 18 வயதைப் பூர்த்தி செய்த பெண்கள் மட்டும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

NVQ தரத்திலான சான்றிதழைப் பெறும் வகையில் இக்கற்கை நெறி நடத்தப்படவுள்ளது.

மேற்படி கற்கைநெறி தொடர்பான விபரத்தைப் பெற விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் சுயமுகவரி இடப்பட்ட கடித உறையினை பதிவுத் தபால் மூலம் SMI தொழில் பயிற்சி வித்தியாபீடம், இல 237/2A, கொழும்பு வீதி, கம்பஹா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றது.(2-272)







வவுனியா கூமாங்குளம் அஸ்திரம் மக்கள் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் சித்திரை புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பாரம்பரிய கலை நிகழ்வுகள், விளையாட்டுக்கள் நடத்தப்பட்ட போது..... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

## விஞ்ஞான பாட ஆசிரியர் பற்றாக்குறை

(கிளிநொச்சி)

கிளி/ முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் நிலவி வருகின்ற விஞ்ஞான பாட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு மகஜர் கையளிக்கப் பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் நிர்வாகத்தினால் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அ.முருகவேலிடம் நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இக்கல்லூரியில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களில் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3 விஞ்ஞான பாட ஆசிரியர்கள் தேவையான நிலையில் ஒரு விஞ்ஞான பாட ஆசிரியரே இங்கு கல்வி கற்பிக்கின்றார்.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் கையளித்து கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் இது வரையில் அது நிவர்த்தி செய்யப்படவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த பிக்கப் வாகனம் பேருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது

### இருவர் உயிரிழப்பு; இருவர் படுகாயம்

(மல்லாவி)

பிக்கப் வாகனமும் இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்தில் மரணமடைந்தனர். மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியில் தச்சடம்பன் கிராமத்திற்கு அண்மையாக நேர்ந்துள்ளது.


இதன்போது பிக்கப் வாகனச் சாரதியான மட்டுவில் தெற்கு,மருதங்குளம் சாவகச்சேரியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான நவரட்ணம் ஜீவராஜ் (வயது-29),இதே வாகனத்தில் பயணித்த கைதடி நுணாவில் சாவகச்சேரியைச் சேர்ந்த வனராஜசிங்கம் தயாபாலன் (வயது-23) என்ற இளைஞன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இருவரின் சடலங்களும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிக்கப் வாகனத்தில் பயணித்த ஒரு பிள்ளையின் தந்தையான செல்வரட்ணம் ரகு ராஜ் (வயது-27) என்பவர்வாகனத்திலிருந்து வெளியே தூக்கிவீசப்பட்டு படுகாயம் அடை ந்தார்.

இதேவேளை எதிரே வந்த இ.போ.ச. பேருந்தின் சாரதியான திருநாவுக்கரசு கிருஷ்ணராஜா (வயது-55) என்பவர் படுகாயம் அடைந்தார்.

இவர்கள் இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசா



லையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சுபாஸ் மின்சேவைகள் தனியார் ஒப்பந்தக்காரருடைய பிக்கப் வாகனம் தச்சடம்பன் கிராமத்திற்கு அண்மையாக பயணித்துக்கொண்டிருந்தவேளை வீதிக்கு குறுக்காக நின்ற மாடொன்றுடன் மோதுண்டு வேகக்கட்டுப்பாட்டை இழந்து இ.போ.சபையில் கடமை புரிகின்ற சிட்டை ஆய்வாளர்கள் பயணித்த பேருந்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளானது.


இதன்போது இருவர் சம்பவ இடத்தில் மரணமடைந்ததுடன் இருவர் படுகாயம் அடைந்தனர்.சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் சடலங்களை மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்ததுடன் விபத்திற்குள்ளான இரு வாகனங்களையும்மாங்குளம்பொலிஸ்நிலையம்கொண்டு சென்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றது. (2-15-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிசயப்பழம்

சில ஆண்டுகளுக்குமுன், இரண்டு விஞ்ஞானிகள் கேரள மாநிலத்து அகஸ்தியமலைப் பகுதியில் நடந்துசென்று கொண்டிருந்தனர்.



அபூர்வமான மூலிகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அவர்கள் நகரப்பகுதியில் இருந்து காட்டிற்குள் வந்திருந்தனர்.

காணி என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த மல்லன்காணி அவர்களுக்கு வழிகாட்டியாக உதவி செய்தான்.

கரடு முரடான காட்டுப் பாதையில் பயணித்த விஞ்ஞானிகள் இருவரும் விரைவிலேயே களைத்துப் போயினர்.

ஆனால் மல்லனுக்குக் களைப்பே ஏற்படவில்லை.


இடையிலேயே, மடியிலிருந்து ஏதோ ஒரு பழத்தை எடுத்துக் கடித்துத் தின்றுகொண்டே களைப்பு என்பது துளிகூட இல்லாமல், தங்களுடன் நடந்து வந்த அவனுடைய சக்தியைக் கண்டு விஞ்ஞானிகள் வியப்படைந்தனர்.

'அடிக்கடி அவன் உண்ணும் பழங்களில்தான் ஏதோ அபூர்வ சக்தி உள்ளதா?' என்று இருவரும் எண்ணினர்.

தங்களுடைய சந்தேகத்திற்கு விடை காண எண்ணி, அவனிடமிருந்து சில பழங்களை வாங்கி இருவரும் உண்டனர்.

என்ன ஆச்சரியம்? எங்கு இருந்தோ அவர்களுடைய உடல்களிலும் சக்தி பிறந்தது.

அதையறிந்த விஞ்ஞானிகள் பரபரப்படைந்தனர்.



அந்தப் பழத்தை அவர்கள் அதற்கு முன் பார்த்ததும் இல்லை. அதைப்பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை.

அத்தகைய அபூர்வ சக்தி வாய்ந்த பழங்கள் நகரங்களில் வாழும் மனிதர்களுக்கும் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்றும், அவற்றிலிருந்து மருந்து தயாரித்தால், அது எத்தனை நோயாளிகளுக்குப் பயன்படும் என்றும் எண்ணினர்.

உடனே, இருவரும் மல்லனை அந்தப் பழங்கள் உண்டாகும் மரத்தினைத் தங்களுக்குக் காட்ட வேண்டினர்.

ஆனால் மல்லன் அவற்றை அறிமுகமற்றவர்களுக்குக் காட்டக் கூடாது என்று கூறினான்.

தங்கள் சாதியில் மூத்தவர்களிடம் அதைப்பற்றி சொல்லி, அவர்கள் அனுமதித்தால் மட்டுமே அவற்றைக் காட்ட முடியும் என்றும் கூறினான்.

பிறகு அவர்களை தங்கள் இனத்து மூத்தவர்களிடம் அழைத்துச் சென்றான்.

காணியினத் தலைவர்கள் தங்கள் இன மக்கள் அனைவரையும் கூட்டி அதுபற்றி விவாதித்தனர். கூட்டத்தில் பலர் தாங்கள் பாதுகாத்து வரும் ரகசியங்களை அந்நியர்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என்றனர்.

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 69 - பெட்ரியாக்கும் என்ற இடத்தில் இடம்பெற்ற போரின் பின்னர், விட்டேலியஸ் என்பவன் ரோம் பேரரசின் மன்னன் ஆனான்.
- 1492 - வாசனைப் பொருட்களை ஆசியாவில் கொள்வனவு செய்யும் உரிமையை கொலம்பஸ்ஸ்பெயின் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண் பயணி ஜோவானிடா வெரசானோ நியூயோர்க் துறைமுகத்தை அடைந்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா கூட்டணியில் இருந்து விலகியது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் வட கரோலினாவின் பிளைமவுத் நகரைத் தாக்கினர்.
- 1895 - சீன-ஜப்பான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1961 - அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏயினால் பயிற்சியளிக்கப்பட்ட கியூபா அகதிகள் குழு ஒன்று பிடெல் காஸ்ட்ரோவைப் பதவியில் இருந்து அகற்றும் நோக்குடன் பிக்ஸ் விரிகுடாவில் தரையிறங்கினார்.
- 1969 - செக்கோசிலொவாக்கியாவின் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் அலெக்சாண்டர் டூப்செக் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1970 - அப்போலோ 13 விண்கப்பல் பழுதடைந்த நிலையில் தனது பயணத்தை இடைநிறுத்தி பூமிக்குத் திரும்பியது.
- 1971 - முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்காள தேச மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1975 - கம்போடியாவில் கெமர் ரூச் படைகள் தலைநகர் நாம் பென்னைக் கைப்பற்றினர். கம்போடிய அரசு சரணடைந்தது.
- 2004 - இந்தியத் திரைப்பட நடிகை சௌந்தர்யா பெங்களூரில் விமான விபத்தில் இறந்தார்.

### பிறப்புகள்

- 1756 -தீரன் சின்னமலை, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1805)
- 1894 - நிக்கிட்டா குருஷேவ், சோவியத் ஒன்றியத்தின் பிரதமர் (இ. 1971)
- 1916 - சிறிமாவோ பண்டாரநாயக்க, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண பிரதமர் (இ. 2000)
- 1946 - ஜோர்ஜெஸ் கோஹ்லெர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1995)
- 1972 - முத்தையா முரளிதரன், இலங்கைப் பந்தாளர்

### இறப்புகள்

- 1761 - தொமஸ் பேயிஸ், ஆங்கிலேயக் கணிதவியலாளர்
- 1790 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்க கண்டுபிடிப்பாளர் (பி. 1706)
- 1942 - ஜீன் பெரின், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயறபியலாளர் (பி. 1870)
- 1975 - சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவர், இரண்டாவது குடியரசுத் தலைவர் (பி. 1888)
- 1976 - ஹென்ரிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1895)
- 1994 - றொஜர் ஸ்பெரி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1913)
- 2004 - சௌந்தர்யா, இந்திய நடிகை (பி. 1971)
- 2013 - டி. கே. ராமமூர்த்தி, தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி. 1922)

### சிறிமாவோ பண்டாரநாயக்க



சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் ஓர் அரசியல்வாதியாவார். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப்பகுதிகளில் பதவியில் இருந்தவர்.

இவரே உலகிலேயே முதலாவது பெண பிரதமருமாவார். இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர். இவரது கணவர் மறைந்த முன்னாள் இலங்கை பிரதமர் சொலமன் பண்டாரநாயக்க. மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தவர். இவரது ஏனைய மக்கள் அநுரா பண்டாரநாயக்க, சுனேத்திரா பண்டாரநாயக்க ஆகியோர்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்டபின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். ஜூலை 21, 1960 இல் முதன் முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1970 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கட்சியை வழி நடாத்தினார். 1970 பொதுத்தேர்தலில் இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து பெரும் வெற்றி பெற்று இரண்டாம் முறை மீண்டும் பிரதமரானார்.

1977 இல் நடந்த தேர்தலில் கட்சி படு தோல்வி அடைந்தது. 1980 இல் அன்றைய ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சியினால் ஊழல் குற்றச்சாட்டுகளில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்டு ஏழு வருடாங்களுக்கு அரச பதவிகளை ஏற்கத் தடை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

**புதிய டைரக்டர்**

'படத்தின் ரிலீஸ் திகதியை தள்ளிப்போடலாம்' என்று ரஜினியும் கூறினார்.

எல்லாவற்றையும் யோசித்துப பார்த்த முத்துராமன், ஒரு முடிவுக்கு வந்தார்.

**ரஜினி 'சுயதரிசனம்'**

'ஆரம்ப காலங்களில் நான் முரட்டுத்தனமாகப் பலரிடம் நடநது கொண்டதை நினைத்து இப்போது வருத்தப் படுகிறேன். ஆனால் அதற்குக்காரணம், குறுகிய மனப் பான்மை அல்ல. அவர்களின்அணுகு முறையும் ஒரு காரணம்.'

- ரஜினிகாந்த். -

தன்னால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது என்று எண்ணி டைரக்டர் எஸ்.பி.முத்துராமன், மனைவி இறந்த துயரத் தையெல்லாம் இதயத்துக்குள் போட்டு பூட்டிவிட்டு, 'பாண்டியன்' படத்தின் இறுதிக் காட்சி களை எடுத்து, குறித்த நாளில் படத்தை ரிலீஸ் செய்தார்.

'பாண்டியன்' படம் வெளிவர 10 நாட்கள் இருக்கும்போது, முத்துராமனின் மனைவி கமலா திடீரென்று மாரடைப்பால் காலமானார். அப்போது அவருக்கு வயது 56.

'படத்தின் ரிலீஸ் திகதியை தள்ளி வைக்கலாம்' என்று ரஜினி உள்பட எல்லோரும் கூறியும் கூட, எஸ்.பி.முத்துராமன் அதற்கு சம்மதிக்கவில்லை.

'படம் தீபாவளிக்கு வெளியா கும் என்று ஏற்கனவே அறிவித்து விட்டோம். தியேட்டர்களிலும் அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக் கிறன. இப்போது படத்தை தள்ளிப போட்டால் சம்பந்தப்பட்ட அனைவரும் பாதிக்கப்படுவார்கள். நான் இதுவரை என் கடமையைச் சரிவரச் செய்து வந்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தவள் என் மனைவி. அவள் ஆன்மா சாந்தியடைவதற்காகவாவது, இந்தப் படத்தை நான் குறிப் பிட்ட நாளில் ரிலஸ் செய்ய வேண்டும' என்று கூறிய முத்துராமன், மனைவி இறந்த 3 ஆவது நாளிலேயே படப்பிடிப்பில் ஈடுபட்டார், மீதி இருந்த காட்சிகளை எடுத்து முடித்து, ஏற்கனவே அறிவித்தபடி 25-10-1992 தீபாவளி அன்று ரிலீஸ் செய்தார்.



ரஜினி-ஜெயசுதா-பாண்டியன்

**ஜெயசுதா**

அக்கா-தம்பி பாசத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம் 'பாண்டியன்.'

ரஜினி கதாநாயகனாக நடிக்க வந்த புதிதில் நடிகை ஜெயசுதாவும் நாயகியாக அறிமுகமானார். திருமணத்துக்குப் பின் நடிக்காமலிருந்த ஜெயசுதா மறுபடியும் நடிக்க வந்த படம் 'பாண்டியன்.' இதில் ரஜினியின் அக்காவாக நடித்திருந்தார்.

அவருடைய கணவராக - வில்லன் வேடத்தில் சரண்ராஜ் நடித்திருந்தார்.

**கன்னடம்**

'பாம்பே தாதா' என்ற கன்னடப் படத்தைத் தழுவி (கதை: பிரபாகர்) 'பாண்டியன்' எடுக்கப்பட்டது. வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார்.

படத்தில் ரஜினிக்கு ஜோடியாக குஷ்பு நடித்திருந்தார். ரஜினிக்கும் குஷ்புவுக்கும் ஒரு போட்டி பாடல் நடனக்காட்சி படத்தில் பிரபலம்.

இளையராஜா இசையில் 'உலகத்துக்காக பிறந்தவன் நானே! வளர்ந்தது என்னை தமிழன்னைதானே', 'அன்பே நீ என்ன கண்ணனோ மன்னனோ', 'பாணடியனா கொக்கா கொக்கா", 'அடிஜிம்பா ஜெயிப்பது இந்த பாண்டியனா' ஆகிய பாடல்கள் ரசனைக்குரியவை.


இளையராஜாவின் மகனும் இசை அமைப் பாளருமான கார்த்திக் ராஜா இசையில் 'பாண்டியனின் ராஜ்ஜியத்தில் உய்யலாலா' என்ற பாடலும் படத்தில் இடம் பெற்றிருந்தது.

**லாபத்தில் பங்கு**

படத்தின் மூலம் கிடைத்த லாபத்தில் கணிசமான பகுதியை முத்துராமன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், மீதியை யூனிட்டில் உள்ள 14 பேருக்கும் பிரித்துக் கொடுக்கும் படியும் யூனிட்டைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள்.

அதற்கு முத்துராமன் மறுத்து விட்டார். 'நானும் இந்த யூனிட்டில் ஒருவன்தான். எல்லோருக்கும் சம பங்கு கிடைப்பதே நியாயம்" என்று கூறி, 15 பங்குகளாகப் பிரித்து, தனக்கு ஒரு பங்கை மட்டும் எடுத்துக்கொண்டார்.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-118**

...வருவாக. வாழப் பழச் சீப்பு ஒண்ணத் தோள்ல போட்டு முறுக்கு மிச்சரு சிலேபின்னு வாங்கி ஒண்ணாச் சரடு சுத்தி ஒரே பையில போட்டு எப்பவுமே சாயங்காலம் வருவாக.

என் பொண்டாட்டிய விடிஞ்சு கூட்டிட்டுப் போறேன்னு ராத்தங்கல் தங்குவாக. சோலி முடிஞ்சதும் சொல்லாமப் போயிருவாக.

இது என்னாடி பொழப்பு...? வாழவும் வாழாம ; தீக்கவும் தீக்காம...? எதுக்கும் ஒரு முடிபு இருக்கு.

இதுக்கு இருக்கா இல்லையா?

நான் ஒரு முடிவுக்கு வந்துட்டனக்கா. காஞ்ச காத்தாழ நாராப் போயிட்டாரு எங்கப்பன்.

ஒரு மகளக் கட்டிக்குடுத்தும் வாழல; ஒரு மகளக் கட்டிக் குடுக்கவே முடியல. நான் மண்டையக் கிண்டயப் போட்டுட்டாப் பொம்பளப் பிள்ளைக ரெண்டு அனாதிக் காட்ல அலைஞ்சிருமேன்னு பொலம்பிப் பொலம்பி இத்துப்போனாரு. பொழப்புதான் நல்ல பொழப்பா இல்லாமப் போச்சு அவருக்கு. சாவாவது நல்ல சாவு சாகட்டுமேன்னு அக்கா தங்கச்சிக கூடி ஒரு முடிபு பண்ணிட் டோம்.

என்னா முடிபு பண்ணீக?

என் புருசனுக்குக் கழுத்து நீட்ட என் தங்கச்சியச் சம்மதிக்க வச்சுப்புட்டேன்.

க்ருவாச்சி ஒருபேச்சும் பேசல.

ஒனக்கு அது புடிக்காத முடிவா இருக்கலாம். ஒம் பொழப்புலயும் எம் பொழப்புலயும் நம்மளுக்குப் புடிச்சதா நடந்துக்கிட்டிருக்கு?

இது ஒங்க அப்பனுக்குத் தெரியுமா?

தெரியும்.

என்ன சொன்னாரு?

ஒட்டச் சட்டின்னாலும் கொழுக்கட்ட வெந்தாப் போதுமன்னு பெருசா இழுத்துப்பெருமூச்சு விட்டுச்சு பெருசு.

பொம்பளைக ரெண்டு பேரும் போயிட்டா இந்தக் கெழவன் கதி என்[illegible] யோசிச்சு மண்ட காஞ்சு போனா கருவாச்சி.

மறுநாள் பொழுசாய வந்துட்டானய்யா முத்துக்காமு, காடு மேடு மேஞ்ச ஆடு மாறு [illegible] வீடு சேர.



இந்த மொற வாழப் பழச் சீப்பையும் முறுக்கையும் காணோம்.

செக்குல தலையக் குடுத் தவன்மாதிரி தலையில எண்ணை ஒழுக வந்தவன், கையில மஞ்சமசேர்ன்னு ஒரு மஞ்சப் பைய வச்சிருக்கான்.

பிரிச்சுப் பாத்தா அரவீசை ஆட்டுக்கறி- எலும்பு கிலும்பு இல்லாம.

குழம்பு வை பாதிய ; வறுத்திரு பாதிய ன்னு சொல்லிப்புட்டு வாசம் புடிக்க உக்காந்துட்டான் வாசல்லயே. யண்ணே! எப்பக் கூட்டிட்டுப் போகப் போற எங்க கனகத்த? கருவாச்சி லேசா அவன அசைச்சுப் பாக்குறா.

நானா மாட்டேங்குறன்....? ஒருத்திக்கு ரெண்டுபேரையும் வச்சுப் பொழைக்கிறேங்கறேன். மாமனுக்கும் மனசு இல்ல; மச்சினிச்சிக்கும் மனசில்ல.

சுவர்ல பூச்சி புடிக்கிற பல்லிய வேடிக்கை பாத்துக்கிட்டிருந்த சுப்பஞ்செட்டியாரு, பல்லியப் பூச்சி முழுங்கினதும் பார்வையத் திருப்பினாரு.

மனசக் கல்லாக்கிக்கிட்டுச் சொல்றேன் தாயி. கல்யாணம் பண்ணி அவளயும் கூட்டிட்டுப் போகச் சொல்லு இத்துப் போன போர்வையை இழுத்துப் பொத்தி இருமிக்கிட்டே சொன்னாரு சுப்பஞ்செட்டியார்.

*(தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன நீர்மூழ்கி கப்பல்களுக்கு இலங்கை அனுமதி மறுப்பு!

## இந்திய செய்தி நிறுவனம் தகவல்

**(கொழும்பு)**

**சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் இலங்கைக்குள் வருவதை இலங்கை அரசாங்கம் தடுத்து நிறுத்தியுள்ளதாக இந்திய செய்தி நிறுவனமான (பி.ரி.ஐ.) செய்தி வெளியிட்டுள்ளது.**



இதனையடுத்து சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களின் வருகை மற்றும் பராமரிப்பு, விநியோகம் என்பவற்றை பாகிஸ்தானின் க்வாடர் துறைமுகம் (Gwadar port) பொறுப்பேற்றுள்ளது எனவும் செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நகர்வு சீனாவை பொறுத்தவரை முக்கியமான ஒன்று என்று சங்காய் நிறுவக தென்னாசிய கற்கை நெறிகளுக்கான பணிப்பாளர் ஸாவோ கன்சேங் (Zhao Gancheng) தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் க்வாடார் துறைமுகம் இனிவரும் காலங்களில் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பொருட்களை ஏற்றி, இறக்கும் முக்கிய துறைமுகமாக மாற்றமடையும் என்று கன்சேங் தெரிவித்தார்.

அத்துடன் சீனாவின் சியான் ஜிங் பிராந்தியத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் உதவும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானால் கையகப்படுத்தப்பட்டுள்ள காஷ்மீர் பிராந்தியம் ஊடக க்வாடர் துறைமுகம் இணைக்கப்படவுள்ளதாக கன்சேங் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நடவடிக்கை பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மலை சார்ந்த பிராந்தியத்தில் நிலவும் தீவிரவாத செயல்களால் பாதிப்புக்கு உள்ளாகலாம் என்று சீனாவின் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் க்வாடர் துறைமுக பிரதேசத்தில் நீர்பற்றாக்குறை மற்றும் நிர்மாணங்கள், போக்குவரத்து, தொழிலாளர்களின் வெற்றிடங்கள் என்பன சீனாவின் முயற்சிக்கு தடையாக இருக்கலாம் என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.

இருப்பினும் பாகிஸ்தான் - சீனா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை நோக்காகக் கொண்டு இந்த துறைமுகத்தில் சீன நிறுவனம் ஒன்று இந்த மாதத்தில் இருந்து நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. (இ-5)

## இருநாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு வினைத்திறனான நடவடிக்கையில்லை

இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, இந்திய அரசாங்கமோ, அல்லது தமிழக அரசாங்கமோ வினைத்திறனான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்று இந்திய ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மற்றும் தமிழக மீனவர்களின் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை.

ஆனால் இந்த விடயத்தில் இந்தியாவின் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்திக் கொள்கின்றனரே தவிர, தீர்வுகளை முன்வைக்கவில்லை.

தமிழக மீனவர்கள் பாவிக்கின்ற இழுவைப் படகே இங்கு பிரதான பிரச்சினையாக இருக்கிறது.

இழுவைப் படகினை பயன்படுத்துவதால் அதிக அளவான கடல் வளங்கள் பாதிப்படைகின்றன.

எனவே இதற்கு மாற்றுவழி குறித்து சிந்திக்க வேண்டு என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-5)

## விபத்தில் சிறுமி பலி

ஹபரண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதருஸ் பிரதேசத்தில் ஆட்டோ ஒன்று பாதையை விட்டு விலகி அருகில் இருந்த குடியிருப்பில் மோதியதில் சிறுமி ஒருவர் பலியானார்.

சம்பவத்தில் மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் ஹபரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-5)

## சிங்கள அமைப்பு கடும் கண்டனம்

(லண்டன்)


பிரித்தானியாவின் தொழில் கட்சித் தலைவர் எட்மிலிபாண்ட் விடுத்திருந்த சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி குறித்து, லண்டனில் உள்ள சிங்கள சமூக அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அவரது வாழ்த்துச் செய்தியில் தமிழர்களுக்கு மாத்திரமே புத்தாண்டு வாழ்த்தை தெரிவித்திருந்தார்.

பிரித்தானியாவில் உள்ள தமிழ் சமூகத்துக்கு தொழில் கட்சி எப்போதும் பக்கபலமாக இருக்கும் என்றும், யுத்தக்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வாழ்த்து குறிப்பில் சிங்கள மக்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கு லண்டனை தளமாக கொண்டு இயங்கும் சிங்கள அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அடுத்த மாதம் பிரித்தானியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-5)



கு.கோபிராஜ் எழுதிய சண் டியூர் நூல் வெளியீட்டு விழா வில் பிரதம விருந்தினராக கல ந்து கொண்ட பேராசிரியர் எஸ். சிவ லிங் க ராஜா மங்கல விளக் கேற்றுவதையும் முதல் பிரதி வழங்கப்படுவதையும் நிகழ் வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## இலங்கை ஊடாக ஆயுதங்களைப் பெறும் நக்ஸல்கள்

நக்ஸல்கள் இலங்கையின் ஊடாக அதி நவீன ஆயுதங்களை கடத்தி வருவதாக வெளியான தகவல்களையடுத்து, இந்திய மத்திய உளவுத்துறையினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னதாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களே இவ்வாறு இந்திய நக்ஸல் தீவிரவாதிகளுக்கும் ஆயுதங்களை வழங்குவதாக தகவல் கிடைத்துள்ளதாக இந்திய மத்திய உளவுத்துறையை மேற்கோள் காட்டி வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் நேபாளம் மற்றும் மியன்மார் ஊடாக நக்ஸல்கள் பெற்றுக் கொள்வது ஆதாரங்களுடன் உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போது மற்றுமொரு புதிய வழியின் ஊடாகவும் ஆயுதங்கள் கடத்தப்படுவதாக வெளியான தகவல்கள் குறித்து உளவுத்துறை அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நக்ஸலைட் போராளிகளுக்கு நிதியும் ஆயுதங்களும் கிடைத்து வருவது பாதுகாப்பு படையினருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என சிரேஷ்ட இந்திய உளவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-5)

## புதிய சங்கம் உதயம்


யாழ். மாவட்டத்தில் கடமை புரியும் அபிவிருத்தி உதவியாளர்கள் தமக்கான புதிய சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்க்கும் திட்டத்தின்பிரகாரம் 2005 ஆம் ஆண்டு நியமனம் பெற்ற அபிவிருத்தி உதவியாளர்கள் தமக்கான எதிர்கால தொழில் முன்னேறறம் தொடர்பாகவும் தற்போது தமது சேவையில் எதிர்கொள்ளும் தடங்கல்கள் உள்ளிட்ட பல தரப்பட்ட விடயங்ககளை முன்வைத்து யாழப்பாணத்தில் உள்ள அபிவிருத்தி உதவியாளர் கள் கடந்த சனிக்கிழமை யாழ். பஸ்ரியான விருந்தினர் விடுதியில் முற்பகல் 10.30 மணிக்கு கலந் துரையாடி தமக்கான புதிய சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர். இதன் பிரகாரம் தலைவராக மாவட்ட செயலகத்தில் கடமை யற்றும் பா.கமலதாசனும் செயலாளராக சங்கானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் விக்கர் தயாநிதியும் பொருளாளராக மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் வி.தயாபரனும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19,20 திருத்தங்கள் நிறைவேறினால்

# மைத்திரியின் நல்லாட்சி வரலாற்றில் இடம்பிடிக்கும்

## டியூ.எம்.பி.நம்பிக்கை



(கொழும்பு)

**அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தப் பிரேரணைக்கு மேலதிக தேர்தல் முறையை மற்றும் 20 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்படுமானால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி இலங்கை வரலாற்றில் முக்கியமாகப் பதிவாகுமென பாராளுமன்ற உறுப்பினர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.**

இந்தப் பிரேரணை ஏப்ரல் 20, 21 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு வரவுள்ளது. 100 நாள் திட்டத்தில் இது தீர்க்கமான வாக்குறுதிகளாகும்.

இது நிறைவேற்றப்படுமானால் ஒரு வரலாற்று திருப்பமான மாற்றமாக அமையும் என்றும் அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

19 ஆவது திருத்தத்துக்கு இருபிரதான அரசியற் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியதில்லை. இரு கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது.

இதனை 6.2 மில்லியன், 5.7 மில்லியன் மக்கள் அங்கீகரித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் முறையில் மாற்றம் தேவை. அவ்வாறின்றி தேர்தல் முறையை மாற்றாமல் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவது அர்த்தமற்றது என்று ஐ. ம. சு. முன்னணியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைக் கேட்டுள்ளனர்.

எனினும் விரைவில் தேர்தல் முறை மாற்றப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்திற்கு தாம் தொடர்ந்து ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதியை விரைவில் சந்தித்து கலந்துரையாடத் தீர்மானித்துள்ளதாகவும் முன்னாள் அமைச்சரான டியூ. மேலும் தெரிவித்தார். (இ-5)

# இராணுவ பொதுமன்னிப்பு காலம் நீடிப்பு

இராணுவத்தில் இருந்து விதிமுறைகளுக்கு புறம்பாக விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைவதற்கு வழங்கப்பட்ட மன்னிப்பு கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் இராணுவத்தில் இருந்து இடை விலகிச் சென்றவர்கள் மீண்டும் இணைந்து கொண்டு, சட்ட ரீதியாக விலகிச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஊடகப் பேச்சாளர் ஜயனாத் ஜயவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் வழங்கப்பட்ட கால அவகாசத்தின் போது, 13 ஆயிரத்து 600 பேர் வரையில் மீண்டும் தங்களை பதிவு செய்து கொண்டிருப்பதாக தெரி விக்கப்படுகிறது. அவர்களில் 10 ஆயிரத்து 400 பேர் பொது மன்னிப்பின் அடிப்படையில் சட்டபூர்வமாக இராணுவத்தில் இருந்து விலகிச் சென்றுள்ளனர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 30 | 40 | 50-60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 30 | 60 | 50 | 40 | 40 |
| தக்காளி | 60 | 40 | 40 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 80 | 300 | 40 | 50 | 20 | 40 |
| கரட் | 200 | 140 | 100 | 120 | 100 | 120 |
| பூசணி | 60 | 30 | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 30 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 30-50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 60 | 100 | 50-80 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 40 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 40 | 80 | 50-70 | 80 |
| லீக்ஸ் | 300 | 140 | 120 | 600 | 200-240 | 130 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 80 | 80 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 300 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 200 | 120 | 110 | 160 | 100 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 20 | -- | - | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 140 | 80 | 120 | 170 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 45 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 100 | 80 | -- | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 40 | 20 | 40 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 30 | 20-30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 343

மிது மிதுலா




சதீஸ் சதீசன்




கமல் நந்தினி




அனந்தி அனந்திகா




லக்சி சுலக்சி



ரவி வர்மா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் முளைக்கும் சீனாவின் இலத்திரனியல் கண்காணிப்புக் கோபுரம்!



கொழும்பில் தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் சீனா தனது 'கொலையாளியின் தண்டாயுதம்' என அழைக்கப்படும் கனரக ஆயுதங்களை மறைத்து வைத்து கண்காணிப்பில் ஈடுபட முடியும்.

இக்கோபுரம் அமைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டால் இந்திய மாக்கடலினதும் தென்னாசியாவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறு southasiaanalysis.org ஊடகத்தில், பாஸ்கர் ரோய் என்ற மூலோபாய ஆய்வாளர் எழுதியுள்ள கட்டுரையில் எச்சரித்துள்ளார்.

இலங்கையின் புதிய அதிபர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் சீனாவுக்கான பயணத்தை மேற கொண்ட போது, இலங்கையில் மேற்கொள்ளப்படும் சீன முதலீடுகள் மற்றும் கட்டுமானத் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யக் கூடாது எனவும் சீன முதலீட்டைப் பாதுகாக்க வேண்டும் எனவும் சீனத் தலைவர்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

சிறிசேனவைப் பொறுத்தளவில் இலங்கையின் மிக நெருக்கடியான நிதி நிலைமையை ஈடுகட்டுவதென்பது மிகவும் கடினமான ஒரு விடயமாகக் காணப்பட்டது.

நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் கடனை சீனாவுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தேவையிருப்பதால், அதனை வழங்கியுதவுமாறு அனைத்துலக நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கோரியிருந்த போதும் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

சீனாவின் கடன் பிடிக்குள் இலங்கை அகப்பட்டுள்ளமை தெளிவானதாகும்.

இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு இலங்கைய பயன்படுத்தப்படுகிறது.

இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களுள் கொழும்பில் அமைக்கப்படும் தாமரைக் கோபுரமும் ஒன்றாகும்.

இக்கோபுரத்தின் கட்டுமானத்திற்காக சீனாவின் எக்சிம் வங்கி நிதி வழங்கியுள்ளது.

இது ஈபிள் கோபுரத்தை விட 26 மீற்றர் உயரமாக கட்டப்படுகிறது.

103 மில்லியன் டொலர் பெறுமதியான இக்கோபுரமானது சீனத் தேசிய இலத்திரனியல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கூட்டுத்தாபனத்தாலும் Chinese Aerospace Long – March International Trade என்ற பிறிதொரு நிறுவனத்தாலும் நிர்மாணிக்கப்படுகிறது.

இலங்கையை முன்னர் ஆட்சி செய்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தால் இவ்விரு சீன நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

கொழும்பில் தாமரைக் கோபுர நிர்மாணத்தில் ஈடுபடும் சீன நிறுவனங்களுள் ஒன்றான இலத்திரனியல் நிறுவனமானது சீனப் பாதுகாப்பு இலத்திரனியல முறைமை ஒருங்கிணைப்பு, பாதுகாப்பு இலத்திரனியல் முறைமை நிர்மாணம், பொதுப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு, அனைத்துலக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான இலத்திரனியற் பொருட்களை வழங்குதல் உட்பட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

இதேபோன்று சீனாவின் மற்றைய நிறுவனமான விண்வெளிச் செயற்பாட்டு மையமானது பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல், தொழினுட்ப சேவைகளில் ஈடுபடல், பயங்கரவாத எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், கலக எதிர்ப்பு உபகரணங்களை ஏற்றுமதி செய்தல், தொழினுட்பங்கள் மற்றும் சேவைகள் போன்றன உட்பட பல்வேறு ஏற்றுமதி சார் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

இலங்கையில் தென்னாசியாவின் மிகப் பெரிய கோபுரத்தை அமைப்பதில் ஈடுபடும் இவ்விரு சீன நிறுவனங்களும் இந்திய மாக்கடல் மற்றும் இந்தியா ஆகியவற்றைக் கண்காணிப்பதையே தமது நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன.

இலங்கையில் நிர்மாணிக்கப்படும் தாமரைக கோபுரமானது சீனாவின் இலத்திரனியல் கண்காணிப்பு பொறிமுறையை உள்ளடக்கியது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இவ்வாறான [illegible] கோபுரத்தை அமைப்பதன் மூலம் சீனா தனது மறைமுக நிகழ்ச்சி நிரலை அரங்கேற்ற முடியும்.

இந்திய மாக்கடலில் சீனா தனது கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான பொருத்தமான தொழினுட்பம் இலங்கையில் தற்போது காணப்படவில்லை.

ஆகவே கொழும்பில தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதன் மூலம் சீனா தனது 'கொலையாளியின் தண்டாயுதம்' என அழைக்கப்படும் கனரக ஆயுதங்களை மறைத்து வைத்து கண்காணிப்பில் ஈடுபட முடியும்.

இக்கோபுரமானது முற்று முழுதாக அமைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டால் அது இந்திய மாக்கடலினதும் தென்னாசியாவினதும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும்.

சீனாவால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம், கொழும்புத் துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் ஏனைய மூன்று முக்கிய தந்திரோபாயத் திட்டங்கள் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலுக்குத் துணையாக அமையும்.

சீனாவின் 21 ஆம் நூற்றாண்டுக்கான கரையோர பட்டுப்பாதைத் திட்டம் மிக வும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு சீனாவானது இலங்கை போன்ற நாடுகளில் தனது முதலீட்டை மேற்கொள்ளும்.

பட்டுப்பாதைத் திட்டமானது அனைத்திலும் வெற்றி பெறவேண்டும் என்பதற்கான வர்த்தக மற்றும் அபிவிருத்தி முயற்சியாண்மையாக நோக்கப்படுகிறது.

ஆனால் சீனாவானது இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் அதனுடைய பட்டுப் பாதைத் திட்டத்தின் பிரத்தியேக வடிவமாக நோக்கப்படுகிறது.

இலங்கையின் அபிவிருத்திக்காக சீனா, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய முத்தரப்பிற்கும் இடையில் பேச்சுக்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு இலங்கை அதிபரிடமும் வெளியுறவு அமைச்சரிடமும் சீனா கூறியுள்ளது.

இலங்கைய அதிபர் சீனாவில் தங்கியிருந்த போது சீனாவின் இந்த யோசனைக்கு தலையசைத்தது போல் தெரிகிறது. ஆனால் இதற்குள் இந்தியாவையும் கொண்டு வர வேண்டியுள்ளது.

இலங்கையில் தன்னால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இந்தியா அதிருப்தி அடைவதை சீனா நன்கறியும்.

ஏனெனில் இந்த நடவடிக்கைகளில் சில இந்தியா வின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக இந்தியா கருதுகிறது.

இவ்வாறானதொரு முத்தரப்பு உடன்படிக்கையில் இந்தியா எவ்வாறானதொரு பங்களிப்பை வழங்க வேண்டும் என சீனா விரும்புகிறது?

இலங்கையில் சீனா கோபுரம் ஒன்றை அமைக்கும் போதும், தனது நீர் மூழ்கிக் கப்பல்களை கொழும்பில் தரித்து நிறுத்தும் போதும், இறுதியாக இலங்கையை சிவில் மற்றும் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் போதும் இந்தியா இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என சீனா கருதுகிறதா?

இந்தியாவைத் தனது வலைக்குள் இழுப்பதற்காக சீனா, இலங்கையைப் பயன்படுத்துவது போல் தெரிகிறது.

மே மாதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளும் போது உண்மையில இந்த விடயம் தொடர்பாக மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

-நித்தியபாரதி-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்பிடித்தல், மதுபானத்திற்காக 70 கோடி ரூபா செலவிடப்படுகிறது

## அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**புகைப்பிடித்தல் மற்றும் மதுபான பயன்பாட்டிற்காக நாளொன்றுக்கு 70 கோடி ரூபா செலவிடப்படுவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித் துள்ளார்.**



சட்டவிரோத மதுபானத்திற்கான செலவுகளையும் உள்ளடக்கினால் வருடமொன்றுக்கு சுமார் ஆயிரம் பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு புகைப்பிடிப்பதற்காக 25 கோடி ரூபாவும் மதுபானத்திற்காக 45 கோடி ரூபாவும் செலவிடப்படுகின்றது.

வறிய விவசாயிகள், அரச தொழிலாளர்களே அதிகளவில் போதைப் பயன்பாட்டுக்கு அடிமையாகின்றனர். கூலித் தொழிலாளர்களில் 75 வீதமானவர்கள் மதுபானம் அருந்துகின்றனர் என ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெலே சுதா போன்ற சர்வதேச போதைப் பொருள் வர்த்தகர்கள் பலர் இருக்கின்றார்கள் அவர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன.

அந்த தகவல்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படும். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஊடாக நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டு வரப்படுகின்றது.

போதைப்பொருள் தொடர்பிலான வழக்குகளை விசாரணை செய்ய தனியான நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் மூன்று ஆண்டு காலப் பகுதிக்குள் போதைப் பொருளை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பிலான நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# 20-வது திருத்தச்சட்ட மூலம் சு.கவினால் நாடாளுமன்றில்

## அமைச்சர் எஸ்.பி. தகவல்



(கொழும்பு)

20ஆம் திருத்தச் சட்டம் சுதந்திரக் கட்சியினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 250ஆக உயர்வடையும் வகையில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

19 ஆம் திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலேயே 20ம் திருத்தச் சட்டமும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை குறைக்கும் 19ஆம் திருத்தச் சட்டத்தை போன்றே, தேர்தல் முறைமையை வலியுறுத்தும் 20ம் திருத்தச் சட்டமும் அவசியமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி சேவைக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டம் 20ம் திகதி

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டமொன்று எதிர்வரும் 20ம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதமரும் கட்சியின் தேசிய தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அலரி மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அரசாங்கத்தின் 100 நாள் திட்ட அமுலாக்கம் மற்றும் எதிர்கால பொதுத் தேர்தல் குறித்து கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

மே தினக் கூட்டம் தொடர்பிலும் இந்த கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம புகையிரத நிலையத்திற்கு வரும் அனைத்து பயணிகளும் தத்தமது இடங்களுக்குச் செல்வதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ். சாலையினால் பேருந்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் கொழும்பி லிருந்து யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு வரும் அனைத்து புகையிரதங்களின் நேரத்திற்கு ஏற்ப வழி இலக்கம் 776 பாதை வழியே குறிகாட்டுவானுக்கும் வழி இலக்கம் 777, 780 பாதைகள் வழியே ஊர்காவற்றுறைக்கும் வழி இலக்கம் 788 பாதை வழியே இளவாலைக்கும் வழி இலக்கம் 789 பாதை வழியே பண்டத்தரிப்புக்கும் செல்வதற்கு பயணிகளின் நன்மை கருதி பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது என வடபிராந்திய போக்குவரத்து சபை முகாமையாளர் செ. குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ-3)

# வெலே சுதாவுடன் தொடர்பில்லையாம்

## நடிகை விளக்கம்

போதைப்பொருள் வர்த்தகர் வெலே சுதாவுடன் தொடர்புகளைப் பேணவில்லை என முன்னணி திரைப்பட நடிகையும், மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளருமான கயேஸா பெரேரா தெரிவித்துள்ளார்.

சில சேறு பூசும் இணையத்தளங்கள் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

நானும் வெள்ளைக்கொடி ஏந்திக்கொண்டு நல்லாட்சி கோமாளிகளுடன் இணைந்திருந்தால் நானும் ஓர் விகாரமகாதேவி போன்ற வரலாற்றுப் புகழ் மிக்க பெண்ணாக போற்றப்பட்டிருப்பேன்.

எனது அரசியல் பயணத்திற்கு தடை ஏற்படுத்தும் தரப்பினர் இவ்வாறு பிழையான பிரசாரங்களை செய்கின்றனர்.

இந்த முட்டாள்தனமான பிரசாரங்களுக்கு எதிராக புலனாய்வு பிரிவு மற்றும் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யவுள்ளேன்.

எனது கணவருக்கு என்னைப் பார்த்துக் கொள்ளும் அளவிற்கு வசதி உண்டு.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது.

இவ்வாறான பொய் செய்திகளை வெளியிட்டு சில இணையத்தளங்கள் பிரபல்யம் அடைய முயற்சிக்கின்றன என கயேஸா பெரேரா சிங்கள இணையத்தளமொன்றுக்கு நேர்காணலில் வழங்கியுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் தாரக மந்திரங்கள் எவை? எவை?

எப்போதும் விழிப்புடன் இருப்பவர்களே வெற்றிகளைக் குவிக்கிறார்கள். எப்போதும் விழிப்போடு என்றால் தூங்கும் போது கூடவா? என்று கேட்கத் தோன்றுகிறதா? ஆம் தூங்கும் போது கூட நீங்கள் விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். அது எப்படிச் சாத்தியம்?

மாவீரன் நெப்போலியன் பல வெற்றிகளைக் குவித்தவர். ஒருமுறை ஒரு சிறிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல விரும்பினார் அவர். அதற்கான படையை நடத்திச் செல்ல தன் தளபதியே போதும் என்று கருதினார்.

அதிகம் தூங்காமல் தொடர்ந்து பணியாற்றியதால் அவர் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பினார். அதனால் படைகளுக்கென அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திலேயே படுத்துத் தூங்கினார்.

நெப்போலியனுக்குப் பதிலாகப் படையை நடத்திச்சென்ற தளபதிக்கு அந்த நாட்டுப் படையை வெல்வது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை.

ஏற்கனவே நெப்போலியன் சொல்லியனுப்பியிருந்த ஆலோசனைகளையும் தாண்டி புதுப்பிரச்சினைகள் அங்கு எழுந்தன.

அதைத்தீர்த்து வைப்பதற்கான சில ஆலோசனைகளைப் பெறுவதற்காக நெப்போலியனைச் சந்திக்க விரும்பினார் அவர். படைகள் போரிட்டுக் கொண்டிருக்கும்போதே அந்த இடத்திலிருந்து நழுவினார். படைக்கொட்டிலுக்கு வந்தார். ஆனால் அப்போது நெப்போலியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். தூங்குவதற்கு அவருக்கு அபூர்வமாகத்தான் வாய்ப்புக் கிடைக்கும் என்பதால் தூங்கும்போது தன்னை எழுப்பக் கூடாது என்று நெப்போலியன் இட்டிருந்த கட்டளையையும் நினைத்துப்பார்த்தார். ஆனால் அவசரமாக ஆலோசனையைப் பெற்றேயாக வேண்டும். இப்போது என்ன செய்வது? என்று யோசித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். பரபரப்பான சூழ்நிலையில் கைகளைப் பிசைந்து கொண்டு அப்படி நின்று கொண்டிருந்த அவரது பார்வை அங்கிருந்த மேசையின் மீது திரும்பியது.

ஒரு பேப்பரில் ஏதோ எழுதப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்தது. அது பறக்காமல் இருப்பதற்காக அதன் மேல் ஒரு கல்லும் வைக்கப்பட்டிருந்தது. தளபதிக்கு அவசர ஆலோசனைகள் என்று அந்தக் கடிதத்தில் மேல் தலைப்பிடப்பட்டிருந்தது.

படையை நடத்திச் செல்லும்போது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த பிரச்சினைகளைத்தவிர வேறு ஏதாவது புதிய பிரச்சினைகள் வந்தால் என்ன செய்யவேண்டும் என்பதற்கான குறிப்புகள் அதில் இருந்தன.

தளபதி அதை எடுத்துக்கொண்டு போர்க்களம் நோக்கி ஓடினார். அதிலுள்ள புதிய ஆலோசனைகளைப் பின்பற்றினார். வெற்றியும் பெற்றார். பின்னர் தன் தலைவனின் புத்திக்கூர்மையை எண்ணி வியந்தார்.

இதுதான் தூங்கும்போதே விழித்திருப்பது என்பது. மாவீரன் நெப்போலியனின் வெற்றிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டவர்கள் உங்களிடம் எத்தனை படைவீரர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? என்னைச் சேர்க்காமல் ஐம்பதாயிரம்பேர். என்னைச் சேர்த்தால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் என்பதுதான்.

எந்தச் செயலையும் செய்து முடிக்க முதலில் தேவைப்படுவது அதைப் பற்றிய நினைப்புத்தான். அதனால் தான் அறம் செய் என்று ஆணை இடாமல் அறம் செய்ய விரும்பு என்று ஆலோசனை சொன்னாள் ஔவை. முதலில் ஒரு செயலைச் செய்ய விரும்பி விட்டாலே நாம் செயற்படத்தொடங்கி விடுவோம். பிறகு அதில் நமக்கு வெற்றிதான்.

இளைஞர்களாக இருந்தாலும் தொழில் முனைவோர்களாக இருந்தாலும் நெப்போலியனின் அணுகுமுறைகளைப் பின்பற்றினால் வெற்றியின் திறவுகோல்கள் எளிதில் உங்கள் வசப்படும்.

உங்களால் முடியும் என்ற புகழ்பெற்ற நூலின் ஆசிரியர் ஷிவ் கெரோ சொல்வதைப் பாருங்கள். சாதனையாளர்கள் வித்தியாசமான செயல்கள் எதையும் செய்துவிடுவதில்லை. சாதாரண செயல்களையே சற்று வித்தியாசமாகச் செய்கிறார்கள்.

சாதனையாளர்களின் வெற்றிக்கான முக்கியமான காரணங்களைஆராய்ந்தால் அதில் கீழ்க்கண்ட நான்கு தன்மைகள் மறைந்திருப்பது தெரியும்.

திடமான முடிவு, இடைவிடாத முயற்சி, கடின உழைப்பு, பரிபூரண நம்பிக்கை... இவைதான் வெற்றிக்கான தாரக மந்திரங்கள்.

ஒரேஒரு கருத்தை மட்டும் நினைத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உன் வாழ்க்கை மயமாக்கு. அந்த நினைவை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள் அனைத்திலும் அந்த ஒரு கருத்தே நிலைத்திருக்கட்டும். அதுதான் உன்னை வெற்றிக்கு அழைத்துச்செல்லும் என்பார் சுவாமி விவேகானந்தர்.

எதனை நினைக்கிறாயோ? அதுவாகவே ஆகிறாய் என்பது அனுபவ மொழி.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்



**குரு பார்வையால் வெற்றிக் கனியை எட்டிப் பிடிப்பீர்கள்!**

**லட்சியம் நிறைவேறும் வரை இரவு பகலாகப் பாடுபடும் சிம்ம இராசி நேயர்களே!**

'ஜய' வருடம் முடிந்து 'மன்மத' வருடம் தொடங்கியிருக்கின்றது. அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கத்தோடும் விரய வியாழனின் சஞ்சாரத்தோடும் தொடங்கும் இந்தப் புத்தாண்டில் நினைத்ததெல்லாம் நிறைவேறுமா? நிகழ் காலத்தில் நல்ல மாற்றங்கள் வந்து சேருமா?, சென்ற ஆண்டில் ஏற்பட்ட சிக்கல்கள் எல்லாம் விலகுமா? என்றெல்லாம் உங்கள் மனதில் எண்ணங்கள் மலர்ந்து கொண்டே இருக்கும்.

பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் பிறக்கும்பொழுதே உங்களுக்கு வந்திருக்கும். கம்பீரமாகப் பேசிக் காரியங்களை சாதித்துக் கொள்ளும் உங்களுக்கு சனி மற்றும் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் தக்கவிதத்தில் சுய ஜாதகத்தில் இருந்தால் சிக்கல்கள் ஏதும வராது. செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். செல்வ நிலை உயரும். மக்கள் போற்றும் விதத்தில் மாபெரும் வாழ்க்கை அமையும். தனலாபாதிபதியான புதன் தகுந்த பலம் பெற்றிருந்தால் பண மழையிலும் நனைய வாய்ப்பு உண்டு. பல நாடுகளிலும் உங்கள் புகழ் பரவ வாய்ப்பு ஏற்படும்.

**சந்தோஷம் தரும் சனி வக்ரம்!**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் உச்சம் பெற்று யோககாரகன் செவ்வாயுடன் தனலாபாதிபதி புதனுடனும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே தனவரவு தாராளமாக வந்து சேரும். தைரியத்தோடு செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனப் பயம் அகலும்.

வருடத் தொடக்கத்தில் குரு வக்ரம் பெற்று, இரண்டு நாட்களிலேயே குரு வக்ர நிவர்த்தியும் ஆகிவிடுகிறார். அதன் பார்வை 4, 6, 8 ஆகிய மூன்று இடங்களிலும் பதிகிறது அல்லவா? எனவே, எதிர்பார்த்ததை விட இனிய மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது.

சனியின் சஞ்சாரமும் வக்ர இயக்கத்திலேயே இருக்கிறது. ஆண்டு முழுவதும் வக்ரமடைவதும், வக்ர நிவர்த்தியாவதுமாகவே இருக்கிறது. குறிப்பாக அர்த்தாஷ்டமச் சனி வக்ரம் பெறும் பொழுதெல்லாம் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறும். துன்பங்கள் தூளாகும். ஆரோக்கியப் பாதிப்பிலிருந்து நல்ல உடல்நலம் பெறுவீர்கள்.

அதே சமயத்தில் சப்தமாதிபதியாகவும் சனி விளங்குகிறார். எனவே குடும்ப பிரச்சினைகள் ஒவ்வொன்றாக தலைதூக்கலாம். மேலும் சுக்ரன் பலம் பெற்று சொந்த வீட்டில் சஞ்சரிப்பது யோகம்தான். அதிர்ஷ்ட தேவதையின் அருளுக்கு நீங்கள் பாத்திரமாக விளங்குவீர்கள். தங்கம், வெள்ளி தடையின்றி வாங்குவீர்கள். விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்கள் வாங்குவது முதல் வீடுகட்டுவது வரை படிப்படியாக நடைபெற, உலாவரும் கிரகங்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கேது 8 இல் இருக்கும் வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. இடர்பாடுகளையும், இன்னல்கயையும் சந்திக்காமல் இருக்க வழிபிறக்கும். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்ற உதவுவது நமது யோசனையும், தெய்வத்தின் பூசனையும்தான.

**குரு பார்வை என்ன செய்யும்?**

நவக்கிரகங்களின் நல்ல கிரகமான குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்குத்தான் பலம் அதிகம். உங்கள் ராசியைப் பொறுத்தவரை குருபகவான் பஞ்சம அஷ்டமாதிபதியாவார். பஞ்சமாதிபதி என்றால் நல்ல ஆதிபத்யம் ஆகும்.




எனவே சொத்துக்களால் வந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். தேக நலனில் தெளிவு பிறக்கும். சாட்சிக் கையெழுத்திட்டு சங்கடத்தில் ஆழ்ந்தவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் அதிலிருந்து விடுபடுவர். பார்க்கும் குருவைப் பலப்படுத்த பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

**செயற்பாட்டில் வெற்றியைக் கொடுக்குமா, ஜென்ம குரு?**

இதுவரை உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் ஜென்ம ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இப்பொழுது சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகும் குருபகவான் உங்கள் ராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்கள் புனிதமடைகின்றன.

**ஐந்தினை குருதான் பார்த்தால்**
**அகத்தினில் மகிழ்ச்சி கூடும்!**
**ஏழினை குருதான் பார்த்தால்**
**இல்லறம் இனிதாய் வாய்க்கும்!**
**ஒன்பதை குருதான் பார்த்தால்**
**உன்னத வாழ்க்கை**
**அமையும்,**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே 5 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள் மாறும். வந்த துயரங்கள் வாயிலோடு நிற்கும். சிந்தித்த காரியங்கள் சிந்தித்தபடியே நடைபெறவில்லையே என்ற கவலை அகலும். மந்தனாம் சனியால் வந்த பாதிப்புகள் குருப் பெயர்ச்சியின் விளைவாக மாறும்.

பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். கூர்மதி படைத்தவர்கள் உங்கள் கூடவே இருந்து ஜோரான வாழ்க்கை அமைய சில நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுப்பர்.

7 ஆம் இடத்தைப் பார்க்கும் குருவால் இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். இதுவரை தடைப்பட்ட வரன்கள் தானாக வந்து சேரும். வெளிநாட்டு பயணத்தில் இருந்த தாமதங்கள் அகலும்.

பிரிந்தவர்கள் வந்திணைவர். ஒன்பதாமிடத்தைப் பார்க்கும் குருவால் தந்தை வழிப் பிரச்சினைகள் அகலும். பெற்றோர்களின் பிரியம் உங்கள்மீது பதியும். நல்ல எண்ணம் கொண்டவர்களின் தொடர்பால் நலன்களையும், வளங்களையும் வரவழைத்துக்கொள்வீர்கள்.

இடமாற்றப் பிரச்சினைகள் அகலும். தொழிலுக்கு மாற்று இனத் தவர்கள் துணையாக நிற்பர். பகைத் தவரும், நட்[illegible]தவரும் பக்கபலமாக வந்திணைவர். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கிறதே என்று புதிய வாகனங்கள் வாங்க திட்டம் தீட்டுவீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பெயர்ச்சி யின் பொழுது உங்கள் ராசியிலேயே ராகு சஞ்சரிக்கப் போவது அவ்வளவு நல்லதல்ல. சூரியன் வீட்டில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சப்தம ஸ்தானத்திலும் கேது சஞ்சரிக்கின்றார்.

சர்ப்ப தோஷத்தின் பிடியிலிருக்கும் கிரக நிலை உங்களுக்கு வந்து சேருகிறது. எனவே, ராகு-கேது பெயர்ச்சியான இரண்டு மாதங்களுக்குள் முறையான சர்ப்ப சாந்திகளைச் செய்து கொள்வதன் மூலம் முன்னேற்றத் தடைகளை அகற்றிக கொள்ள முடியும்.

குடும்பத்திலும் குழப்பங்கள் ஏற்படலாம். மூன்றாம் நபரின் குறுக்கீட்டால் முக்கியப் பிரச்சினைகளுக்கு முடிவு எடுக்க முடியாமல் திணறுவீர்கள். வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். சேமிப்புகள் கரையலாம்.

**சனியின் சஞ்சார நிலைகள்!**

சனிபகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். 12.6.2015 முதல் துலாம் ராசியில் வக்ர மடைகிறார்.

30.7.2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 5.9.2015இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியடைகிறார். பிறகு 26.03.2016-ல் மீண்டும் விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகிறார்.

இப்படி இந்த ஆண்டு முழுவதும் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதும், வக்ர நிவர்த்தியாவதும் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. துலாத்தில் சனி இருக்கும் பொழுது சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகளில வெற்றி ஏற்படும். உடன பிறப்புகளால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

விருச்சிகத்தில் சனி வக்ரமடையும்பொழுது வீடு, இடம் வாங்கும் சூழ்நிலைகள் உருவாகும்.

உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொள்வீர்கள்.

அதே நேரத்தில் சப்தமாதிபதி வக்ரம் பெறுவதால் வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். கல்யாண வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். சனி கவசம் பாடி சனிபகவானை வழிபடுவது நல்லது. ஆதித்தனும், சனியும் அடுத்தடுத்து இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது சிறப்பானதாகும்.

**குருவின் வக்ர இயக்கம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறுகிறார். 7.2.2016 இல் சிம்ம ராசியில் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக பண வரவு திருப்தி தரும்.

தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிடைக்கும். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும. அவர்களின் அன்னிய



தேசப் பயணங்கள் எண்ணியபடி முடிவடையும். குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ராசிநாதன் சூரியனை பலப்படுத்த ஞாயிற்றுக்கிழமை அன்று சூரிய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ராகு- கேது சாந்தியும் மனக்கவலையை மாற்றும். சனிக்கிழமை அனுமனுக்கு விளக்கேற்றி வழிபடுவது நல்லது. திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

சிம்ம ராசியில் பிறந்த பெண்களே, ஆண்டின் தொடக்கத்தில் அடுக்கடுக்காக நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். குருச்சந்திர யோகத்தால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். சனியின் வக்ர இயக்கம் சாதகமாக இருப்பதால் வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். ஆரோக்கியத் தொல்லை அகலும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் கூடுதல் கவனம் தேவை.

உறவினர் பகை உருவாகும். இட மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் எதிர்பாராத விதமாக வந்து சேரும். நாக சாந்தியும், நலம் தரும் தெய்வ வழிபாடும தேக நலனையும் சீராக்கும். செல்வ வளமும் பெருகும்.


ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## குரு பார்வையால் வெற்றிக் கனியை எட்டிப் பிடிப்பீர்கள்

நாளை கன்னி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பருத்தித்துறை மாய க்கை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் அண்மையில் இடம் பெற்ற போது....

நிகழ்வின் நிழல்கள்




சர்வதேச ரீதியில் ஐ.எஸ்.கே.ஏ. கராத்தே கழகத்தினால் பேராதனைப் பல்க லைக்கழகத்தில் அண்மையில் நடத்தப் பட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் பங்கு பற்றி சாதனை படைத்த மகாதேவா இல்ல கராத்தே வீரவீராங்கனைகள், நடுவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாசிரி யர்களை படங்களில் காணலாம்.



இந்து கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது பெற்ற கோப்பாய் சிவம் சிவானந்த சர்மாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலய மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்றபோது...







சாவகச்சேரி நுணாவில் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய பாலஸ்தாபன கும்பா பிஷேகம் அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)




பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சியின் யாழ்ப் பாணக் கிளையின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஊழியர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசா லையில் அண்மையில் இரத்ததானம் வழங்கிய போது...








நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மலரட்டும் புதுவசந்தம் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.







நிகழ்வின் நிழல்கள்



ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் கலை விழா கடந்த சனிக் கிழமை யாழ்.இலங்கை வேந்தன் கலைக் கல் லூரியில் நடைபெற்ற போது...

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகிதாசார தேர்தல் முறைமையை மாற்ற யாருக்கும் உரிமையில்லை

**(கொழும்பு)**

**மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன கொண்டு வந்த விகிதாசார தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது என நவசம சமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாக இருந்த போதிலும் விகிதாசார முறைமையை மாற்றியமைக்க உரிமையில்லை.


விகிதாசார தேர்தல் முறைமை ஜே.ஆர்.ஜயவர்தனவால் மக்களுக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதம், இதை யாரும் மாற்றியமைக்க நினைத்தால் வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமது கட்சியின் தலைவர் ஒருவரால் பெற்றுக்கொடுக்கப்பட்ட தேர்தல் முறையை மாற்ற ஐக்கிய தேசியக் கட்சி உடன்படும் பட்சத்தில் அது கட்சிக்கும் கட்சித் தலைவருக்கும் இழைக்கும் துரோகம் எனவும், அதனை துரோகி கட்சியாகத்தான் நாம் நோக்குவோம் என தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தேசிய நிறைவேற்று சபைக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவித்தார்.

மூளைக் கோளாறு உள்ளவர்கள்தான் இரண்டு கட்சிகளும் ஒன்றென தெரிவிப்பார்கள் என விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

## விக்கிரமபாகு கடும் எதிர்ப்பு



கடந்த 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்து அவருக்காக தேர்தல் பிரசார பணிகளில் அநுரகுமார திஸாநாயக்க முழுமூச்சுடன் செயற்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷ அன்று எந்த பாதையை தேர்ந்தெடுத்தார் என்பது அநுரவிற்கு தெரியாமல் போய்விட்டதா? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் அன்று மகிந்தவிற்கு ஆதரவு தெரிவித்துவிட்டு இன்று இரு கட்சிகளும் ஒன்றென தெரிவிக்கின்றார்.

தேசிய நிறைவேற்று சபையை உருவாக்குவதற்கு யோசனை முன்வைத்ததும் அவரே தான் என விக்ரமபாகு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் மகிந்த தமது குடும்பத்தை வேரோடு அழித்திருப்பார் என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்தார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம் தான் நண்பரின் வீட்டில் மறைந்திருந்ததாக அவர் உலகத்திற்கே அறிவித்திருந்தார்.

அவ்வாறானதொரு கொடுங்கோல் ஆட்சியே கடந்த 10 வருடங்களாக இந்த நாட்டில் நடைபெற்றது.

மற்றையது வெள்ளை வானில் மக்களை கடத்திச் சென்றார்கள், அவன்காட் ஆயுத களஞ்சியசாலையை கடலில் மட்டுமன்றி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் வைத்திருந்தனர்.

சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமான நவீன ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இவற்றை வைத்து கடந்த ஆட்சி காலத்தில் என்னவெல்லாம் செய்தார்கள் என்று யாருக்குத் தெரியும்.

இவ்வாறான ஒரு ஆட்சியை வேறு எந்த ஆட்சியுடனும் ஒப்பிட முடியாது.

இதேவேளை நாளை மறுதினம் 19 ஆம் திகதி தேர்தல் முறை குறித்து கலந்துரையாடி முக்கிய தீர்மானங்கள் எட்டப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## எஜமானின் வீட்டுக்கு தீவைப்பு இலங்கை பணிப்பெண் மறுப்பு

(கொழும்பு)

வீட்டை விட்டு ஓடுவதற்கு முன்னர், தன் எஜமானின் வீட்டுக்கு தீ வைத்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கை பணிப்பெண் தன் மீதான குற்றச்சாட்டை நீதிமன்றில் நேற்று மறுத்துள்ளார்.

வீட்டுக்காரர்கள் நித்திரையாக இருந்தபோது தனது அறையில் பெற்றோலை ஊற்றி தீ வைத்து விட்டு ஓடிவிட்டார் என்று இலங்கை பணிப்பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பணிப்பெண் தங்கும் பகுதியில் 70 சதவீதம் எரிந்துவிட்டதாக பொலிஸார் கூறினர். ஆனால், தான் தீ வைக்கவில்லையென அவர் கூறினார்.

தன் எஜமானர்களின் கொடுமை காரணமாகவே தான் வீட்டை விட்டு ஓடியதாக அவர் ஒப்புக்கொண்டார். "எனது எஜமானி என்னை கொடுமைப்படுத்தினார். எனக்கு பெருமளவு வேலை கொடுத்தார்" என அவர் வழக்கு தொடுநர்களிடம் கூறினார்.

தான் முதலில் பாதுகாப்பு கமராவை துணியால் மறைத்ததாகவும் ஓடுவதற்கு முன்னர் அத்துணியை அகற்றியதாக அவர் தெரிவித்தார்.

தனது மகன் முதலில் தீ பரவுவதை கண்டு தன்னை நித்திரையில் எழுப்பியதாக 47 வயது பாரெய்ன் எஜமான் கூறினார்.

தான் பணிப் பெண்ணின் அறையில் பரவிய தீயை அணைக்க முயன்றதாக அவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் மே மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (இ)

## 1,122 சாரதிகள் கைது

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் ஆயிரத்து 122 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை கடந்த 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் 600 மோட்டார் சாரதிகள், முச்சக்கரவண்டி சாரதிகள் 404பேரும், லொறி சாரதிகள் 37 பேரும் கார் சாரதிகள் 33 பேரும் வான் சாரதிகள் 17 பேரும் அடங்குவதாகவும் ஏனையோர் இதர வாகனங்களின் சாரதி கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## தந்தையை கொலை செய்த தனயன் ரயிலின் முன்பாய்ந்து தற்கொலை!

பொலநறுவை நவநகர கனங்கொல்ல பகுதியில் குடும்பப் பிரச்சினை காரணமாக மகன் தனது தந்தையைத் தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மூன்று பிள்ளைகளின் தநதையான 57 வயதுடைய ஏ.எல் ஜெயசிங்க தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து சண்டையிடுவார்.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்த தந்தையுடன் அவரது 21 வயது மகன் சண்டையிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஆத்திரமடைந்த மகன் தந்தையை தாக்கிக் கொலை செய்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல 2.30 மணியளவில் நடந்துள்ளது.

இச்சம்பவத்தினையடுத்து தந்தையைக் கொலை செய்த மகன் ரயி லில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த உயிரிழப்புக்கள் குறித்து பொலநறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகினறனர். (இ-5)

## அக்னி - 3 ஏவுகணை பரிசோதனை வெற்றி

அணு ஆயுதத்தை ஏந்திச் சென்று 3 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு அப்பாலுள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட அக்னி- 3 ஏவுகணை இராணுவத்தால் வெற்றிகரமாக ஏவிப் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

"ஒடிசா மாநிலம் வீலர் தீவுகளில் இருந்து அக்னி- 3 வெற்றிகரமாக ஏவப்பட்டது. இது வழக்கமான பரிசோதனை என நிலைய இயக்குநர் எம்.வி.கே.வி.பிரசாத் தெரிவித்தார்.

அக்னி-3 ஏவுகணையானது 16 மீற்றர் உயரம், 2 மீற்றர் சுற்றளவு, 48 தொன் எடை கொண்டது. இது ஆயிரத்து 500 கிலோ எடையுள்ள வெடிபொருளை ஏந்திச் சென்று தாக்கவல்லது.

ஏற்கனவே இது இந்திய இராணுவத்தில் இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி எலிசபேத் ஞானதீபம் அருட்பிரகாசம்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் டென்மார்க் Vejle ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட எலிசபேத் ஞானதீபம் அருட்பிரகாசம் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை சனிக்கிழமை மு.ப.10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 வரை Sct.Pouls Kirke(Metodistkirken), Vissingsgade 15A,7100 Vejle, Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி பரராசசிங்கம் சிவபாக்கியம்



உடுப்பிட்டி கம்பர் மலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் தோணிக்கல்லை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பரராசசிங்கம் சிவபாக்கியம் அவர்கள் 14.04.2015 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மு.ப.10.00 மணியளவில் தோணிக்கல் இந்து மயானத்தில பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### மடுத்தீன் பாவிலுப்பிள்ளை

(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் தற்போது நீர்கொழும்பு குடாப்பாடுவவில் வசித்தவருமான மடுத்தீன் பாவிலுப்பிள்ளை கடந்த 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் 19 A1, துஷாரா மாவத்தை குடாப்படுவ நீர்கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் நீர்கொழும்பு பொதுச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் இந்தியாவை இல்லாதொழிப்பேன்

## பிரதமர் மோடி சபதம்

(டொரண்டோ)

**இந்தியா மிகப்பெரிய நாடு. அதனை சுத்தம் செய்ய சிறிது காலம் தேவைப்படும். இந்தியா தூய்மையாவதை அனைவரும் பார்ப்பார்கள். இந்தியா தூய்மை ஆகும் வரை எனது பணி ஓயாது எனத் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி ஊழல் இந்தியா என்ற அடையாளத்தை மாற்றி திறமையான இந்தியா என்ற அடையாளத்தை பெறும் வரை பாடுபடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.**

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா நாடுகளுக்கு அரசுமுறைப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி கனடா சென்று அந்நாட்டு பிரதமர் ஸ்டீபன் ஹார்பரை சந்தித்துப் பேசினார்.


இந்த சந்திப்பின் போது இந்தியாவின் அணு உலைகளுக்கு தேவையான யுரேனியம் எரிபொருளை ஐந்தாண்டுகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட 12 ஒப்பந்தங்கள் இந்தியா -கனடா இடையே ஏற்பட் டன. இதையடுத்து நேற்று டொரண்டோவில் இந்தியர்கள் ஏற்பாடு செய்துள்ள பிரம்மாண்ட நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

எனக்கு அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பிற்கு கனடா நாட்டு பிரதமருக்கும், கனடா மக்களுக்கும் எனது நன்றி. ஆனால் இந்த கௌரவம் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டதல்ல. 125 கோடி இந்திய மக்களுக்கு வழங்கப்பட்டது.

இங்கு இந்தியர்களுக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதற்கு காரணம் மோடி அல்ல. இந்தியர்களாகிய நீங்கள் மட்டுமே.

முன்னர் நான் டொரண்டோ வந்த போது என்னை யாருக்கும் தெரியாது. ஆனால் இப்போது மிகப்பெரிய அன்பான வரவேற்பு கிடைத்துள்ளது. கனடாவிற்கு நேற்று முன்தினம் வந்தேன். இன்று போய் விடுவேன். ஆனால் கனடாவில் அளிக்கப்பட்ட அன்பை என்றும் என்னால் மறக்க முடியாது.

இந்தியா, கனடா உறவில் ஒரு புதிய அத்தியாயம் இது. 2003 ஆம் ஆண்டு குஜராத் முதல்வராக இருந்தது முதலே எனக்கும் கனடாவிற்கும் இடையே நல்லுறவு உள்ளது.



இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 10 மாதங்கள் ஆகிறது. இப்போது மக்களும் மாறத் தொடங்கி விட்டனர். 100 நாட்களில் 14 கோடி பேருக்கு வங்கி கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மிகப் பெரிய நாடு. அதனை சுத்தம் செய்ய சிறிது காலம் ஆகும். பிரச்சினை பெரியது தான். ஆனால் இந்தியா தூய்மையாவதை அனைவரும் பார்ப்பார்கள். இந்தியா தூய்மை ஆகும் வரை எனது பணி ஓயாது.

வளர்ச்சி மட்டுமே இந்தியாவின் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு. இந்தியாவிடம் வலிமை உள்ளது. ஆனால் வாய்ப்புக்கள் தேவைப்படுகிறது.

இந்தியா இளமையான நாடு. அது எங்களின் மிகப் பெரிய வளம். 80 கோடி இளைஞர்கள், 80 கோடி கனவுகள், 160 கோடி வலிமையான கரங்கள், இதுதான் இந்தியாவின் மிகப் பெரிய சொத்து.

காங்கிரஸ் ஆட்சியில் "ஊழல் இந்தியா" என்ற அடையாளம் இருந்தது. அது இனி "திறமையான இந்தியா" என்ற அடையாளத்தை பெறும்.

இந்திய இளைஞர்கள் வேலை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். வேலை தேடுபவர்களாக அல்ல.

முதல் முயற்சியிலேயே செவ்வாய்க் கிரகத்திற்கு செயற்கை கோள் அனுப்பியதே இந்தியாவின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

காவி, ஆற்றலின் நிறம். அந்த ஆற்றலைக் கொண்டு ஒரு ஆற்றல் மறுமலர்ச்சியை இந்தியாவில் ஏற்படுத்துவோம். முதலில் ஆற்றல் புரட்சி, 2 ஆவது விலங்குகளை பாதுகாப்பதன் மூலம் வெண்மை புரட்சி, 3 ஆவது வேளாண் உற்பத்தி மூலம் பசுமை புரட்சி, 4 ஆவது சுற்றுச்சூழல் தூய்மை மூலம் நீலப் புரட்சியை ஏற்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நாடு திரும்பிய ராகுல் காந்தி!

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி 56 நாட்கள் விடுப்புக்குப் பிறகு இந்தியா திரும்பியுள்ளார். நேற்று முற்பகல் 11.15 மணியளவில் தாய் ஏர்வேஸ் மூலம் பாங்கொங்கிலிருந்து அவர் டில்லி வந்து சேர்ந்தார். முற்பகல் 10.45 மணிக்கு விமானம் வருவதாக இருநதது. ஆனால், 40 நிமிடங்கள் விமானம் தாமதமாக வந்தடைந்தது. இதற்கிடையில், முற்பகல் 11 மணிககே காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, அவரது மகள் பிரியங்கா காந்தி ஆகியோர் டில்லி துக்ளக்சாலையில் உள்ள ராகுல காந்தியின் வீட்டுக்குச் சென்றனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கிய நிலையில், கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதியன்று ராகுல் காந்தி இந்தியாவில் இருந்து புறப்பட்டார். கட்சிப் பணிகளில இருந்து சிறிது நாள் ராகுல் விலகியிருப்பார் என்று மட்டுமே தெரிவித்த காங்கிரஸ் மேலிடம் அவர் எங்கு சென்றார்? எதற்காக சென்றார்? எப்போது திரும்புவார்? என எவ்வித தகவலையும் அளிக்கவில்லை.

இதனால், ராகுல் காந்தியைக் காணவில்லை, ராகுல் எங்கே என்றெல்லாம் போஸ்டர் முதல் சமூக வலைத்தளங்கள் வரை விமர்சனங்கள் வெளுத்து வாங்கின. பா.ஜ.கவும் விட்டு வைக்கவில்லை, காங்கிரஸ் கட்சி நிலச் சட்டத்தில் இல்லாத குற்றத்தை ஆராய்வதை விட நாட்டிலிருந்து காணாமற் போன தங்கள் கட்சி துணைத் தலைவரை தேடட்டும் என கிண்டலடித்தது.

இவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் சல்மான் குர்ஷித் போன்றோர் "ராகுல் எங்கிருக்கிறாரோ அங்கு பத்திரமாக இருக்கிறார்" என்பது போன்ற அவ்வப்போது சில அறிவிப்புகளை வெளியிட்டனர். இந் நிலையில், அவர் பாங்கொங்கில் இருந்து வந்த விமானம் மூலம் இந்தியா வந்தடைந்தார். நாளை மறுதினம் 19 ஆம் திகதி டில்லியில் நடைபெறும் விவசாயி கள் பேரணியில் அவர் பங்கேற்பார எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ஹரப்பா காலத்து எலும்புக் கூடுகள் ஹரியானாவில் கண்டுபிடிக்கப்பட்டன

(டில்லி)

ஹரப்பா நாகரிக காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் நான்கு மனித எலும்புக்கூடுகளை வட இந்திய மாநிலமான ஹரியானாவில் இந்திய அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தியாவில் அகழ்வாராய்ச்சியாளர்கள் துணைக்கண்டத்தின் மிகப் பழைமையான நாகரிகம் நிலவிய காலமான ஹரப்பா நாகரிக காலத்தைச் சேர்ந்த மனித எலும்புக் கூடுகள் நான்கை தோண்டியெடுத்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்த எலும்புக்கூடுகள் சுமார் நான்காயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை.

இரண்டு வயதேயான ஆண் குழந்தைகள் மற்றும் ஒரு பெண் பெண் குழந்தையின் எலும்புக் கூடுகள் வட இந்திய மாநிலமான ஹரியானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இந்த எலும்புக்கூடுகள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும், அவைகளை டி.என்.ஏ (மரபணு) பரிசோதனைக்கு உட்படுத்தப்போவதாகவும் அகழ்வாராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றனர்.

ஹரப்பா நாகரிக கால மக்கள் குறித்த புதிய தகவல்களை இந்தக் கண்டுபிடிப்புகள் தரும் என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-5)

## பாரதச் செய்தி

900 வருடம் பழைமையான

## நடன நங்கையின் சிற்பத்தினை மோடியிடம் ஒப்படைத்த ஸ்டீபன்



இந்தியாவில் உள்ள கஜுராஹோ கோயிலுக்கு சொந்தமான நடன நங்கை சிற்பத்தை பிரதமர் மோடியிடம் ஒப்படைத்தார் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர்.

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட "கிளிப் பெண" என்ற அக்கற் சிலை எப்படியோ கனடாவுக்கு சென்றது.

1970 ஆம் ஆண்டு யுனெஸ்கோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கடந்த 4 ஆண்டுகளாக தங்கள் வசம் இருந்த அச்சிலையை கனடா, பிரதமர் மோடியிடம் நேற்று முன்தினம் வழங்கியது. அந்நாட்டு பாராளு மன்ற நூலகத்தில் வைத்து இச்சிலையை பிரதமர் மோடியிடம், ஹார்ப்பர் ஒப்படைத்தார். சிலையை பெற்றுக் கொண்ட மோடி இந்தியா வின் பாரம்பரிய சிற்பத்தை கனடா ஒப்படைத்தது என்று டுவிட் செய்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு கனடாவை சேர்ந்த நபர் ஒருவரிடம் இச்சிலை இருந்ததை கண்ட அந்நாட்டு அதிகாரிகள், சிலை அவருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை கேட்டனர்.

அவரிடம் முறையான ஆவணங்கள் இல்லாததால் அச்சிலையை பறிமுதல் செய்தனர். பின்னர் இந்திய அதிகாரிகளுக்கு சிலை குறித்த தகவலை தந்தனர். இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் தற்போது சிலை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜெயா சொத்துக் குவிப்பு வழக்கு

## உச்சநீதிமன்ற நீதிபதிக்கு நீதிபதி குமாரசாமி கடிதம்

(பெங்களூர்)

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பளிக்க மேலும் 15 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல். தத்துவுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குமாரசாமி கடிதம் எழுதியுள்ளார்.

ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை முடிவடைந்துள்ள நிலையில், தீர்ப்புத் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குமாரசாமி எழுதியுள்ள கடிதத்தில், தற்போது உடனடியாக தீர்ப்பு வழங்கவும், இறுதி வடிவம் கொடுக்கவும் முடியாத நிலையில் உள்ளது. தீர்ப்பு அளிக்க இன்றுடன் கால அவகாசம் முடிவடைவதால், இறுதி தீர்ப்பு வழங்க ஏப்ரல் 30 ஆம் திகதி வரை அதாவது மேலும் 15 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று நீதிபதி குமாரசாமி கோரிக்கை முன்வைத்துள்ளார்.

விரைவில் ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேரின் பிணை மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்துக்கு வரும் போது, தலைமை நீதிபதி தத்து அமர்வு, குமாரசாமியின் கோரிக்கை குறித்து உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தாக்குதல் பலியெடுத்தது 28 பேரை

## ஈராக்கில் தொடரும் சோகம்



(பக்தாத்)

**ஈராக் தலைநகர் பக்தாதிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.**

கடந்த திங்கட்கிழமை இரவும், செவ்வாய்க்கிழமையும் மூன்று வர்த்தக மையங்களில் கார் வெடிகுண்டுகள் மூலம் இந்தத் தாக்குதல்களை பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளை எதிர்கொள்ள அமெரிக்கா கூடுதல் உதவி அளிக்க வேண்டும் என அந்த நாட்டு ஜனாதிபதி ஒபாமாவிடம் ஈராக் ஜனாதிபதி ஹைதர் அல்-அபாதி வோஷிங்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் இந்தத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தமிழ்மொழிவிழா சிங்கப்பூரிலும்

சிங்கப்பூரில் அந்நாட்டு அரசு சார்பில் தமிழ்மொழி விழா ஒரு மாத காலத்துக்கு நடத்தப்பட்டு வருகின்றது.

இவ்விழாவை அந்நாட்டின் இரண்டாவது வர்த்தக, தொழில் அமைச்சரும், பிரதமர் அலுவலக அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் கடந்த 3ஆம் திகதி தொடங்கி வைத்தார்.

தமிழில் வணிகம் தொடர்பான நெறிமுறை, தொழில்நுட்பத்தின் ஆளுமை, 'சினிமா, கதை, திரைக் கதை' எழுதும் பயிலரங்கு, விவாதப் போட்டி, கதைகள் மூலம் தமிழ் கற்றுக் கொள்ள, பேச வகை செய்யும் கருத்தரங்கு, பட்டிமன்றம், திருவள்ளுவர், மறைமலை அடிகளார் போன்ற சான்றோரை போற்றும் நிகழ்ச்சிகள், சித்திரை கலை இரவு என பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. (இ-5)

# விவாகரத்தானவர்களுக்கு மாரடைப்புவர அதிகவாய்ப்பு

திருமண உறவில் தொடர்பவர்களை விட விவாகரத்து செய்து கொண்டவர்களுக்கே அதிகமாக மாரடைப்புவருவதாக அமெரிக்க ஆய்வு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

15 ஆயிரத்து 827 பேரிடம் செய்த ஆய்வுகளின்படி, பெண்களே இதனால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதாகவும், மறுமணம் செய்து கொண்டால், அவர்களுக்கு ஆபத்து குறைவதாகவும் கூறப்படுகிறது.

சர்குலேஷன் என்னும் சஞ்சிகையில் வந்துள்ள இந்த ஆய்வு பற்றிய தகவல்களில், விவாகரத்தால் வரக்கூடிய நீடித்த மன அழுத்தம், மனித உடலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக கூறப்பட்டுள்ளது.

மாரடைப்புக்கான பெரிய காரணமாக விவாகரத்தை பட்டியலிடுவதற்கு முன்னதாக, அது குறித்து மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் ஹார்ட் பவுண்டேஷன் கூறியுள்ளது.

நெருக்கமானவர்களின் மரணம் மாரடைப்பை அதிகரிக்கும் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நேபாள முன்னாள் பிரதமர் பஹதூர் தாப்பா உயிரிழப்பு

நேபாள நாட்டின் முன்னாள் பிரதமர் சூர்ய பஹதூர் தாப்பா காலமானார். அவருக்கு வயது 87.சூர்ய பஹதூர் புற்றுநோய் காரணமாக அவதிப்பட்டு வந்தார். இந்நிலையில் கடந்த மார்ச் 29இல் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை அவரது உயிர் பிரிந்தது.

50 ஆண்டுகளாக நேபாள அரசியலில் கோலோச்சிய சூர்ய பஹதூர் தாப்பா 5 முறை நேபாள பிரதமராக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# படுத்திருக்க பத்து லட்சம்

(வோஷிங்டன்)

படுத்துக்கொண்டே ஏதேனும் வேலை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இது ஓர் அருமையான வாய்ப்பு. ஆம். இந்த வேலைக்குத் தேர்வு செய்யப்படுபவர் செய்ய வேண்டியதெல்லாம் படுத்துக்கொண்டே இருப்பதுதான்.

எந்த வேலை செய்ய வேண்டும் என்றாலும் அதனை படுக்கையில் இருந்தபடியே செய்ய வேண்டும். அப்படியான வேலைக்குத் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு அமெரிக்காவில் உள்ள பிரபல விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, 18 ஆயிரம் டொலர்கள் (சுமார் 10 இலட்சம் இந்திய ரூபா) சம்பளமாக வழங்கவுள்ளது.

புவியீர்ப்பு விசை இல்லாத நிலையில், விண்வெளியில் ஆய்வு செய்யும் வீரர்கள் பலருக்கு தசை, எலும்பு போன்றவை வலுவிழந்து விடும். எனவே, அதைத் தடுப்பதற்கு அவர்களுக்கு உடற்பயிற்சிகள் அளித்தால், அது எந்த அளவு பலனைத் தரும் என்பதை நாசா ஆய்வு செய்ய உள்ளது.

இந்த ஆய்வுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர்களை நாசா எதிர்பார்க்கிறது. அதற்காகத்தான் மேற்கண்ட அறிவிப்பை அது வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வுக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள் 70 நாட்களுக்குப் படுக்கையில் இருக்க வேண்டும். முதல் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு, படுக்கை அமைக்கப்பட்டுள்ள சின்ன அறையில் தங்கள் நாட்களைக் கழிக்க வேண்டும்.

அடுத்த 10 வாரங்கள், தலை கீழாகவும், கால் மேலாகவும் இருக்கும்படி அவர்கள் படுக்கையில் கட்டி வைக்கப்படுவார்கள். உண்பது, கழிப்பது என எந்த வேலையையும் அவர்கள் படுக்கையில் இருந்தபடியே மேற்கொண்டாக வேண்டும்.

அடுத்த 14 நாட்களுக்கு பஸ்கி எடுத்தல், சைக்கிள் ஓட்டும் பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி உள்ளிட்ட உடற்பயிற்சிகளை அவர்கள் படுக்கையில் இருந்தவாறே மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தினமும் உடற்பயிற்சி செய்கிறபோது, அவர்கள் உடலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை அறிவதற்கு, தினமும் அளவீடுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வு நடைபெறும் சூழல் விண்வெளியில் இருப்பதைப் போலவே இருக்கும் என்பதால், இந்தப் பணிக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருக்க வேண்டும் என்று நாசா எதிர்பார்க்கிறது.

இந்த அறிவிப்பில் நாசா குறிப்பட்டுள்ள ஒரே நிபந்தனை, இந்த ஆயவுக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள் அமெரிக்க குடிமகனாகவோ அல்லது அமெரிக்காவில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட ஒருவராகவோ இருக்க வேண்டும் என்பதுதான். (இ-5)

# கிளர்ச்சியாளர்களுக்கு தடை விதித்து ஐ.நா.பாதுகாப்பு சபையில் தீர்மானம்

ஏமன் விவகாரம் தொடர்பாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது தடை விதித்து சவுதி அரேபியா கொண்டு வந்த தீர்மானம், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேறியுள்ளது.

இதற்கு, ஹவுத்தி அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஏமன் அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு தடை விதிக்கவும், அவர்களுக்கு ஆயுதங்களை விற்க தடை பிறப்பித்தும் ஐ.நா பாதுகாப்புச் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சவுதி அரேபியா கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை ஐ.நா. நிறைவேற்ற 14 நாடுகள் ஆதரவு அளித்தன. தீர்மான வாக்கெடுப்பில் ரஷ்யா மட்டும் கலந்துகொள்ளாமல் தவிர்த்துக் கொண்டது.

முன்னதாக ஏமனில் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த ரஷ்யா வலியுறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அமைப்பின் தலைவர் அப்துல் மாலிக் அல்-ஹவுத்தியின் மகன் மற்றும் முன்னாள் ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லாவின் மகன் ஆகியோர்களின் சொத்துக்கள் அனைத்தையும் சர்வதேச அளவில் முடக்கவும், அவர்கள் பயணிக்கவும் தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் சவுதி கொண்டு வந்த தீர்மானத்துக்கு ஹவுத்திக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்த தீர்மானம் வன்முறையை தூண்டும் விதத்தில் இருப்பதாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை எதிர்த்து ஏமன் மக்களை திரட்டி மாபெரும் பேரணி நடத்தவுள்ளதாக அந்த கிளர்ச்சியாளர்களுக்கு சொந்தமான தொலைக்காட்சியில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஏமனுக்கான அமைதித் தூதுவர் ஜமால் பெனோமர் இராஜினாமா

வளைகுடா நாடுகளில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் போதிய ஒத்துழைப்பு கிடைக்காததால் ஏமன் நாட்டுக்கான ஐ.நா. அமைதி தூதர் ஜமால் பெனோமர் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

மொராக்கோ நாட்டை சேர்ந்த தூதரக அதிகாரியான பெனோமர் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஏமனுக்கான ஐ.நா. அமைதி தூதராக பதவி வகித்து வந்தார். கானா நாட்டில் உள்ள அக்ராவில் ஐ.நா. சார்பாக எபோலா நோயை குணப்படுத்தும் பணியில் பணிபுரிந்து வரும் மாரிடானியாவை சேர்ந்த தூதராக அதிகாரியான இஸ்மாயில் அவுல்ட் சீய்க் அகமது ஏமனுக்கான புதிய ஐ.நா. அமைதி தூதராக நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது.

போரை முடிவுக்கு கொண்டு வந்து, அமைதி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. பாதுகாப்பு சபை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், பெனோமர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அந்நாட்டில் ஷியா பிரிவை சேர்ந்த ஹவுத்தி படையினரின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் கடந்த மார்ச் 26ஆம் திகதி முதல் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டு அதிரடிப்படை தாக்குதல் நடத்தி வருகிறது.

அமைதி பேச்சுவார்த்தை என்ற பெயரில் பெனோமரை ஹவுத்தி படையினர் ஏமாற்றி வந்துள்ளதாக வளைகுடா நாடுகள் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளச்சாமியாருக்குக்
கழுத்திலே உருத் திராட்சம்
– தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம்

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது மிகப்பெரிய தவறு என இந்திய இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதியும் தற்போதைய இந்திய வெளியுறவுத்துறை துணை அமைச்சருமான வி.கே.சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத்தால் பயிற்சி வழங்கப்பட்ட விடுதலைப் புலிகளுடன் இந்திய அமைதிப்படை மோதியமை மிகப்பெரிய தவறு எனக் குறிப்பிட்டுள்ள வி.கே.சிங், இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளுடன் போரிட்டு அதன் தலைவர் பிரபாகரன் இருக்கும் இடத்தை நெருங்கிய போதும் மேலிடத்தின் உத்தரவு காரணமாக புலிகளின் தலைவர் பிரபாகரன் தப்பித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது என்றும் வி.கே.சிங் கூறியுள்ளார்.

இந்திய அமைதிப்படை, விடுதலைப் புலிகளுடன் மோதியமை மிகப்பெரிய தவறு என்ற உண்மையை உணர்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு 28 ஆண்டுகாலம் இந்தியாவுக்குத் தேவைப்பட்டமை தான் மிகப்பெரிய வேதனை தரும் செய்தியாகும்.

இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து இந்திய அமைதிப்படை எங்களைக்காப்பாற்றும் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு கிடைத்த செய்தி அதிர்ச்சியானது. விடுதலைப்புலிகளும் இந்திய அமைதிப்படையும் மோதிக்கொண்டதில் அப்பாவித் தமிழ்மக்கள் பலியாகிப் போன மிகப்பெரும் கொடூரம் நடந்தேறியது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் இந்திய அமைதிப்படை நடத்திய தாக்குதலில் மருத்துவர்களும் வைத்தியசாலைப் பணியாளர்களும் உயிரிழந்து போன துயரம் இன்றுவரை கறைபடிந்த வரலாறாகவேயுள்ளது.

இந் நிலையில் இந்திய அமைதிப்படை விடுதலைப் புலிகளுடன் மோதல் நடத்தியமை மிகப்பெரும் தவறு என முன்னாள் இந்திய இராணுவத் தலைமைத் தளபதி கூறும் போது, அமைதிப்படையால் கொல்லப்பட்ட தமிழ் உறவுகளை நினைத்து கண்ணீர்விடாமல் எங்ஙனம் இருக்க முடியும்?

எப்போதும் எங்களைக் கொன்றபின்பே நடந்தது தவறு என்று கூறுகின்ற நாசகாரம் எங்கள் விடயத்தில் சர்வசாதாரணமாயிற்று.

விடுதலைப் புலிகளுடன் போர் தொடுத்த இந்திய அமைதிப்படை அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்த கொடூரத்தின் தாக்கம் இன்னமும் மறந்து-மறைந்து போகவில்லை.

இந் நிலையில் இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது மிகப்பெரும் தவறு என்று கூறுவதனூடாக எங்கள் உறவுகளை அநியாயமாகக் கொன்றொழித்தீர்களே! என்று மனம் பதைபதைக்கிறது. இது இந்திய அமைதிப்படை தொடர்பானதாக இருக்க,

வன்னியில் நடந்த பெரும் போரில் கொல்லப்பட்ட அப்பாவித்தமிழ் மக்கள் விடயத்தில் சர்வதேசம் முழுவதும் தவறிழைத்த கொடுமையை எங்ஙனம் மறக்கமுடியும்?

வன்னிப் போரின் போது பொது மக்களைக் காப்பாற்ற ஐ.நா. தவறிவிட்டது என்று அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் காலம் கடந்து கூறுகிறார் எனில், ஈழத் தமிழர்களின் விடயத்தில் எல்லோரும் இப்படித்தான் சொல்வீர்களா என்று நாம் கேள்வி கேட்பது நியாயமல்லவா?

ஓ! எங்கள் விடயத்தில் மட்டும் உலகம், கண் இழந்தபின் சூரிய நமஸ்காரம் செய்வதாக இருப்பது எங்கள் விதியா? அல்லது எங்களுக்கான சதியா? என்பது தான் புரியாமல் உள்ளது.

# ஊழல் மோசடி, கழிவு நீர்ப் பிரச்சினைக்கு துரிதமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்

## நவசமசமாஜ கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

ஊழல் மோசடி குறித்த விசாரணை அறிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் தனது கடமையை நிறைவேற்ற தவறியுள்ளார் என நவசமசமாஜ கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் வே.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி உட்பட பலர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பில் விசாரணைகள் நடைபெற்றன.

இவ் விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் வழக்கு தொடர்வது பற்றி அவர் தான் அறிவிக்க வேண்டும்.

ஆனால் அவர் சரியாக தனது பணியை முன்னெடுக்காமல் அசமந்த போக்கில் செயற்பட்டு வருகின்றார். இந்நிலையில் ஊழல் விசாரணைகளை துரிதப்படுத்தி தண்டனை வழங்கப்பட வேண்டும் என வே.திருநாவுக்கரசு மேலும் கேட்டு கொண்டுள்ளார்.

நொதேர்ன் பவர் எனும் மின்சார நிறுவனத்திலிருந்து கழிவு எண்ணெய் தேங்கி நிலத்தடி நீரில் கலந்துள்ளமை வடபகுதியில் காணப்படும் பாரிய பிரச்சினையாகும்.

இதனால் சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் தெல்லிப்பழை, மல்லாகம், உடுவில் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நிலத்தடி நீரில் பிரச்சினை எதுவும் இல்லையென ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாக வடமாகாண சபை கூறியது.

எனினும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை நடத்திய ஆய்வின் அடிப்படையில் குறித்த நீரில் மாசு கலந்துள்ளதாகவும், அதனை பருக வேண்டாம் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஆனால் குறித்த நீர் சுத்தமானது எனவும், இதனை அரசியல் இலாப நோக்கிற்காக பயன்படுத்த வேண்டாம் எனவும் வடமாகாண முதலமைச்சரும், மாகாண சபை விவசாய அமைச்சரும் தெரிவித்தனர்.

உண்மையிலேயே அந்த நீர் மாசடைந்த நீர்தான் என வே.திருநாவுக்கரசு உறுதிப்பட தெரிவித்தார். ரத்துபஸ்வல, வெலிவேரிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலையொன்றினால் நீர் மாசடைந்தது.

அது தொடர்பில் நாங்கள் முன்னின்று போராடினோம். அதுபோலத்தான் தற்போது சுன்னாகம் பிரச்சினை பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதினால் நூற்றுக்கணக்கான கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

முறையான நடவடிக்கை எடுக்க வேண்டிய வட மாகாண சபை இவ் விடயத்தில் தவறிழைத்துள்ளது.

பிரபல வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரம் அவர்களின் ஆய்வறிக்கையில் நிலத்தடி நீரில் மாசு கலந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என கூறியுள்ளமை தொடர்பில் அவர் உலக சுகாதார மையத்தின் உதவியையும் நாடியுள்ளார்.

இதேவேளை வலி வடக்கில் சில மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அகதி முகாம்களில் பல் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு இது ஆறுதல் அளித்தாலும் பல சஞ்சலங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், தமது காணிகளை பார்வையிட சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

எது எவ்வாறாக இருப்பினும் மக்களின் இன்னல்களும் சிரமங்களும் இன்னும் விலகியப்பாடில்லை. எனவே அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வட பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை அகற்ற மாட்டோம் என அரசாங்கமும் புதிய இராணுவ தளபதியும் தெரிவித்துள்ளதுடன், படையினர் பல்லாயிரக்கணக்கான காணிகளை கையகப்படுத்தும் போது மீள்குடியேற்றம் எங்குபோய் முடியுமென்று தெரியவில்லை என வே.திருநாவுக்கரசு சந்தேகம் வெளியிட்டுள்ளார். (செ-11)

# 10.47 கிலோ கேரளா கஞ்சாவுடன் இளவாலையில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலை பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன், இளைஞர் ஒருவரை பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

19 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபரிடம் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 10.47 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# 21-ம் திகதி வருகிறார் பசில்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 21-ம் திகதி இலங்கை வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே பசில் ராஜபக்ஷ எம்.பி. எதிர்வரும் 20-ம் திகதியளவில் இலங்கைக்கு வருகை தருவார் என்று அவரின் சட்டத்தரணி அண்மையில் கடுவலை நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இந்நிலையில் எதிர்வரும் 21-ம் திகதி பசில் ராஜபக்ஷ இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பசில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு சென்றிருந்தார்.

அதன் பின்னர் பசில் ராஜபக்ஷவுக்கு பாராளுமன்றத்தில் மூன்று மாதங்கள் விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி.சில்வா கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சட்டவிரோத சுரங்கத்தில் கிடைத்த நீல இரத்தினக்கல் விற்பனை!

(கொழும்பு)

அவிசாவளை நீதிமன்றத்திற்கு உட்பட்ட பரக்கடுவ போஹரபாவ ஹிந்தல என்ற பிரதேசத்தில் சட்டவிரோத இரத்தினக்கல் சுரங்கத்தில் இருந்து 200 கோடி ரூபாயுக்கும் மேல் பெறுமதியான நீல இரத்தினக்கல் கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரத்தினக்கல்லை அகழ்ந்து எடுத்த தரப்பினரும் அதனை கொள்வனவு செய்த இரத்தினக்கல் வர்த்தகரும் தலைமறைவாகியுள்ளனர்.

குறித்த நீல இரத்தினக்கல் கிழங்கு ரொட்டி ஒன்றின் அளவை போல் இருக்கும் என சுரங்கத்தில் பணியாற்றியவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த கல் 18 கோடி ரூபாயுக்கு குருவிட்ட பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத இரத்தினக்கல் சுரங்கத்தை வைத்திருப்பது அதில் எடுக்கப்பட்ட இரத்தினக்கல்லை கொள்வனவு செய்வது சட்டவிரோதம் என்பதால், வர்த்தகரும், மாணிக்கக்கல் சுரங்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களும் இவ்வாறு தலைமறைவாகியுள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

# ஸ்ரீ அம்மா பகவானின் ஐஸ்வர்ய யக்ஞா

இந்தியா வரதையபாளையம் ஸ்ரீ கல்கி பகவான் ஆலயத்திலிருந்து பிரதம தாஸாஜி அவர்களால் **Webcast** ஊடாக நிகழ்த்தப்படும் 'ஐஸ்வர்ய யக்ஞா' ஆன்மீக சாதனை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப 4.00 மணிவரை ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பக்தர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து அனுக்ரஹம் பெறும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளது. (ந)

### அமைதியின் சொற்கள்

என்று நாம் இதயத்தின் குரலை செவிமடுப்போமோ, அன்றுதான் நமக்கு சுதந்திரம் என்றால் என்ன என்று புரியும். அதுதான் வாழ்வின் உண்மையாக ஆனந்தம். அந்தசுதந்திரத்தையாரும் அபகரிக்க முடியாது. பயங்கரமான சண்டை மைதானத்திலும் அந்த அமைதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத, அப்படிப்பட்ட அமைதி அது. *(பிரேம் ராவத்)*




### நம்பிக்கை காப்போம்

★ உங்களைப் படைத்த இறைவனை நேசிக்கிறீர்களா? முதலில் உங்களை போன்ற மனிதர்களை நேசியுங்கள். அப்பொழுது தான் உங்களுக்கு இறைவன் நேசம் கிடைக்கும்.

★ நம்பிக்கையுடன் உன்னிடம் ஒருவன் கொடுத்த பொருளை உரியவரிடம் கொடுத்து விடு. உனக்கு எவன் மோசடி செய்தானோ அவனுக்கு நீ மோசடி செய்யாதே.

★ அல்லாஹ் ஒருவனை அழித்து விட வேண்டும் என்று நாடினால் மோசடிகளின் வாசல்களை அவனுக்கு திறந்து விடுகிறான்.

★ உமது உற்ற தோழரிடம் பொய்யை உண்மை என்று கூறுவது மாபெரும் மோசடியாகும்.

★ எந்த தலைவன் பொது மக்களுக்கு சேவை செய்யாமல் மோசடி செய்கிறானோ அவன் சுவர்க்கம் நுழைய மாட்டான்.

★ ஒரு மனிதனைப் பற்றி விசாரிக்காதீர். அவனுடைய நண்பனை தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் ஒவ்வொருவரும் தனது நண்பனைத் தான் பின்பற்றுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி.தரவரிசைப் பட்டியலில் ஆஸி தொடர்ந்து முன்னிலை




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

ஐசிசி நேற்று முன்தினம் வெளியிட்ட புதிய தரவரிசைப் பட்டியலின்படி, உலக சம்பியன் அவுஸ்திரேலியா 122 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

இந்திய அணி 116 புள்ளிகளுடன் தொடர்ந்து 2ஆவது இடத்தில் உள்ளது.

3 ஆவது இடத்தில் தென்னாபிரிக்கா (112 புள்ளி), 4ஈவது இடத்தில் இலங்கை (108), 5ஆவது இடத்தில் நியூசிலாந்து (107), 6ஆவது இடத்தில் இங்கிலாந்து (101), 7ஆவது இடத்தில் பாகிஸ்தான் (95) ஆகிய அணிகள் உள்ளன.

துடுப்பாட்ட தரவரிசையில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் (902) முன்னிலை வகிக்கிறார்.

இலங்கை அணியின் குமார் சங்கக்கார 2 ஆம் இடத்தில் உள்ளார்.

இந்தியாவின் விராட் கோலி 4 ஆவது இடத்திலும், தவான் 6 மற்றும் இந்திய அணித்தலைவர் டோனி 8 ஆவது இடத்திலுமுள்ளனர்.

பந்துவீச்சு தரப்படுத்தலில் அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் முதலிடத்தில் உள்ளார். (க)

# வெற்றியை குவிக்கும் சானியா மிர்ஷாவுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் நேரில் சென்று வாழ்த்து



டென்னிஸ் உலகில் வெற்றிகளை தொடர்ந்து பதிவு செய்து வரும் சானியா மிர்சா-மார்டினா ஹிங்கிஸ் ஜோடி அமெரிக்காவின் சார்லஸ்டன் நகரில் நடைபெற்ற டபிள்யூ.டி.ஏ.பமிலி சர்க்கிள் கோப்பை டென்னிஸ் போட்டியில் சம்பியன்ஷிப் பட்டம் வென்றது. இதையடுத்து, சர்வதேச மகளிர் இரட்டையர் தரவரிசையில் சானியா முதல் இடத்துக்கு முன்னேறினார்.

இந்திய வீராங்கனை ஒருவர் தரவரிசையில் முதலிடம் பிடிப்பது இதுவே முதல் முறை என்பதால் சானியாவுக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் குவிந்த வண்ணம்முள்ளன.

இந்நிலையில், மணிரத்தினம் இயக்கத்தில் வெளியாகவுள்ள ஓ கே கண்மணி படத்தின் தெலுங்கு பதிப்பு அறிமுக விழாவில் கலந்து கொள்வதற்காக ஐதராபாத் நகருக்கு வந்திருந்த இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான், சானியா மிர்ஷாவின் வீட்டிற்கு நேரில் சென்றார்.

அப் போது, டென்னிஸ் தரவரிசையில் முதலிடம் பிடித்த இந்தியாவின் முதல் வீராங்கனை என்ற அரிய சாதனை படைத்த சானியாவைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

இந்த தகவலை சானியா மிர்ஷா தனது டுவிட்டர் அபிமானிகளுடன் பகிர்ந்துகொண்டுள்ளார். (க)

# புதிய மைல்கல்லை எட்டிய ஷேவாக்



ஐபிஎல் தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடி வரும் அதிரடி வீரர் ஷேவாக் இருபது-20 கிரிக்கெட் போட்டியில் 4000 ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை பெற்றார்.

டில்லி அணிக்கு எதிரான நேற்றைய லீக் ஆட்டத்தில் ஷேவாக் 47 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

அவர் 15 ஓட்டங்கள் எடுத்த போது இருபது-20 கிரிக்கெட்டில் 4000 ஓட்டங்கள் எடுத்த 25வது வீரர் ஆனார். அவர் இதுவரை 151 போட்டிகளில் விளையாடி 4,032 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

அது மட்டுமல்லாது ஐபிஎல் வரலாற்றில் ஒட்டுமொத்தமாக அதிக முறை (438 முறை, 99 போட்டி, 332 பவுண்டரி, 106 சிக்சர்) பந்தை எல்லை கோட்டுக்கு வெளியே அனுப்பிய வீரர்களில் முதலிடம் பெற்றார்.

இவருக்கு அடுத்த இடத்தில் பெங்களூர் வீரர் கிறிஸ் கெய்ல் (70 போட்டி, 232 பவுண்டரி, 200 சிக்சர்) உள்ளார். (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

(உரும்பிராய்)


உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டிக்கு விளையாட்டுக்கழகங்கள் மற்றும் பிரதேச அணிகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பகட்டணம் 600ரூபாய் ஆகும். தொடர்புகளுக்கு எ.திசாந்தன்-077 172 5432. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இந்தியாவில் கார்ப்பந்தயம்




இந்தியாவில் அடுத்த ஆண்டு 'பார்முலா-இ' கார்ப்பந்தயத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

உலகளவில் கார்ப்பந்தயத்தில் முன்னணியில் உள்ளது 'பார்முலா-1' கார்ப்பந்தயம். இந்தியாவில் 2011 முதல் 2013 வரை என, 3 முறை நடந்த இப்போட்டி, உத்தர பிரதேச அரசுடன் ஏற்பட்ட வரி பிரச்சினையால் நிறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, 'பார்முலா-1'ஐ போல கரண்ட் உதவியால் இயங்கும் கார்களுக்கான 'பார்முலா-இ' பந்தயத்தை, அடுத்த ஆண்டு இந்தியாவில் நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

மொத்தம் 10 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் தற்போது இந்தியா சார்பில் மகிந்திரா ரேசிங் அணி பங்கேற்று வருகிறது. இதுகுறித்து இந்த அணியின் பிரின்சிபல் கில்பாகில் கூறுகையில்," இந்தியாவில் 'பார்முலா-இ' பந்தயத்தை நடத்தும் முயற்சிகள் ஆரம்ப கட்டத்தில் தான் உள்ளன. இதற்கு தகுந்த சரியான இடத்தை தேடி வருகிறோம். தவிர, உள்ளூர் மற்றும் அரசு நிர்வாகங்களின் ஒத்துழைப்பும் எங்களுக்கு தேவைப்படுகிறது, என்றார். (க)

# டோனியை முன்மாதிரியாக கோலி எடுத்துக்கொள்ள வேண்டும்

## ஸ்டீவ் வாக்



கோலி சிறந்த அணித்தலைவராக விளங்க வேண்டுமானால் டோனியிடம் இருந்து பாடம் கற்க வேண்டும் என்று முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவ் வாக் கூறியுள்ளார்.


கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியுடன், சர்வதேச டெஸ்ட் போட்டியில் இருந்து டோனி திடீரென ஓய்வு பெற்றார்.

இதனால், இந்திய டெஸ்ட் அணித்தலைவர் பொறுப்பை விராட் கோலி ஏற்றார். இதைத் தொடர்ந்து டோனி ஒருநாள் போட்டிகளுக்கு மட்டும் அணித்தலைவராக இருக்கிறார்.

இந்நிலையில் ஷங்காய் நகரில் நேற்று முன்தினம் நடந்த உலக விளையாட்டு விருந்தளிப்பு விழாவில் பங்கேற்க வந்த ஸ்டீவ் வாக் அளித்த பேட்டியில், உலகக்கிண்ணத் தொடரில் கோலியிடம் சில பிரச்சினைகள் காணப்பட்டன.

கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டவராகவும், எதையும் ... முறையில் எடுத்துக்கொள்பவராகவும் காணப்பட்டார். அவர் இன்னும் பக்குவப்படவில்லை.

ஒரு அணித்தலைவராக செயற்பட வேண்டுமானால், தெற்கெடுத்தாலும், உணர்ச்சிவசப்பட கூடாது. எதையும் தாங்க கூடியவராக இருக்க வேண்டும். டோனியிடம் அது போன்ற இதயம் உள்ளது.




மக்கள் எதைப்பற்றி விமர்சனம் சொன்னாலும், அதை டோனி பொருட்படுத்தமாட்டார். எப்போதும் சிரித்தபடியே, தனது வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்.

எனவே, கோலிக்கு, டோனி தான் நல்ல முன்மாதிரியாக இருக்க முடியும். டோனியிடமிருந்து சில விடயங்களை கோலி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் மற்றும் கோலி இருவருமே தலை சிறந்த வீரர்கள்.

இருவருமே நீண்ட காலத்திற்கு அணித்தலைவராக இருக்கப்போகிறவர்கள். அதிக ஓட்டங்களையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாம் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜ மரியாதையுடன் மும்பைக்கு பறந்த தோனியின் குழந்தை



சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் தோனி தனது மனைவி மற்றும் குழந்தை ஜிவா உடன் சென்னை விமான நிலை யம் வந்திருந்தார்.

ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் இன்று சென்னை அணி, மும்பை அணியை வான்கடே மைதானத்தில் எதிர் கொள்கிறது. இதற்காக சென்னை அணி வீரர்கள் நேற்று முன்தினம் மும்பை சென்றனர்.

அப்போது சென்னை அணித் தலைவர் தோனி தனது குழந்தையை தூக்கிக் கொண்டு மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தார்.

எப்போதும் குழந்தையை புகைப் படம் எடுக்க அனுமதிக்காத தோனி, நேற்று முன்தினம் புகைப் படம் எடுத்துக் கொள்ள அனும தித்தார். இவரை பார்க்க ஏராள மான ரசிகர்கள் அங்கு கூடியிருந் தனர்.

பின்னர் விமான நிலைய அதி காரிகள் உதவியுடன் குழந்தைகளுக் கான தள்ளு வண்டியில் வைத்து குழந்தை ஜிவாவை தள்ளிக் கொண்டு விமானத்திற்கு சென்றார் தோனி. (க)




# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(சுதுமலை)

சுதுவை வாழவைக்கும் வாலிபர் சங்கத்தினால நடத்தப்படும் மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் வார இறுதி நாட்களில் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் அணிகள் 07755 08693, 0775890043 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என சுதுவை வாழவைக்கும் வாலிபர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க)

# பரபரப்பான இறுதிப்பந்தில் சன்ரைசர்ஸை வென்றது ராஜஸ்தான்



பரபரப்பான இறுதி ஓவரில் இறுதிப் பந்தில் ஒரு ஓட்டம் தேவை என்ற நிலையில் ஜேம்ஸ் போல்னர் அடித்த 4 ஓட்டங்கள் மூலம் சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணியை வென றது ராஜஸ்தான் ரோயல்ஸ்.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல். லீக் ஆட்டத் தில் ராஜஸ்தான் ரோயல்ஸ், சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் விளையாடின. நாணயச் சுழற் சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்ய, ஐதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப வீரர்களாக வோனர், ஷிகர் தவான் களமிறங்கினர். நிதானமாக ஆடிய ஷிகர் தவான் 10 ஓட்டங்களில் குல்கர்னி பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். விறுவிறுப்பாக ஆடி ரசிகர்களை மகிழ்வித்த வோனர், 14 பந்துக ளில் 21 ஓட்டங்கள் சேர்த்த நிலை யில், அவரை ரகானே ரன் அவுட் செய்தார். அடுத்த ஓவரில் லோகேஷ் ராகுல் (2) விக்கெட்டை இழந்து ஏமாற்றம் அளித்தார்.

35 ஓட்டங்களுக்குள் 3 விக் கெட்டுகளை இழந்து தடுமாறியபோது, ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த நமன் ஓஜா-மார்கன் ஜோடி கடு மையாக போராடியது. ஓஜா 25 ஓட்டங்களிலும், மோர்கன் 27 ஓட் டங்களில் விக்கெட்டை இழந்தனர். அப்போது அணியின் ஓட்ட எண் ணிக்கை 96.

இந்த நெருக்கடியான சூழ் நிலையில் களத்தில் இருந்த ரவி போபரா 23 ஓட்டங்களில், ஆஷிஷ் ரெட்டி ஒரு சிக்சருடன் 13 ஓட்டங் களிலும் எடுக்க, 20 ஓவர் முடிவில் அந்த அணி 5 விக்கெட் இழப்பிற்கு 127 ஓட்டங்கள் சேர்த்தது. ராஜஸ் தான் தரப்பில் குல்கர்னி, டாம்பே தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து 128 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமி றங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டு களை இழந்து 131 ஓட்டங்கள் எடுத்தது. எனவே ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக ரகானே 62 ஓட்டத்தினையும் பந்து வீச்சில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக பொபரா 2 விக்கெட்டினை கைப்பற்றினார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ரகானே தெரிவானார். (க)

# தமிழர்களுக்கு எதிராக...

ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைத்தல், சித்திரவதைகள் பாலியல் வல்லுறவு, ஏனைய வழி களிலான பாலியல் வன்முறைகள் போன்றன அதிகரித்துள்ளன.

இந்த பாலியல் வன்முறைகள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்தவர்களை இலக்கு வைத்தே இடம்பெற்று வருகின்றன. தமிழ் மக்களின் வாழ்விடப் பிர தேசங்கள் இராணுவ மயமாக்கப் பட்டுள்ளதன் காரணமாகவே தமிழ்ப் பெணகள் பாலியல் துஷ்பிரயோகங் களுக்கு உள்ளாக்கப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போதும், போர் முடிவுக்கு வந்த பின்னரும் தமிழ் மக்களுக்கு எதிராக படை யினர் மேற்கொண்ட பாலியல் வன்முறைகள் தொடர்பில் விரி வாக ஆவணப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அரிதாகவே நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ் மக்களை இனரீதியாக அவமானப்படுத்தும் வகையிலும், விடு தலைப் புலிகளுடன் தொடர்பு களை வைத்திருந்தவர்களை இலக்கு வைத்தும், பாலியல் வன் முறைகள் மேற்கொள்ளப்பட்டதாக தடுப்புக்காவலில் இருந்து விடு வக்கப்பட்ட பெண்கள் சாட்சிய மளித துள்ளனர் என்று பான் கீ மூன் தனதறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இப்பிரச்சினைகளுக் கான தீர்வுகள் தொடர்பில் இவ் வறிக்கையில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது பரிந் துரைகளையும் முன்வைத்துள் ளார்.

இதன்படி, படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பாலியல் வன்முறைகள் தொடர் பிலான குற்றச்சாட்டுக்கள் தொடர் பில் பக்கச்சார்பற்ற விசாரணை களை மேற்கொள்ளுமாறு அவர் புதிய அரசாங்கத்தினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் கணவரை இழந்த பெணகள் மற்றும் குடும்பப் பொறுப புக்களைச் சுமக்கும் பெண்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகள் உள்ளிட்ட உதவி களை வழங்குமாறும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் தட்டங்களை மேற்கொள்ளு மாறும அவர் அரசாங்கத்தை வலியுறுததி யுள்ளார்.

அத்துடன், போர்களின் போது பாலியல் வன்முறைகளை தடுக்க வும், பாலியல் வன்முறைகளுக்குப் பொறுப்புக்கூறுவதை உறுதிப் படுத்தவும் நடவடிக்கை எடுக்கு மாறு ஐ.நா பாதுகாப்புச் சபையிடம் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சோமவன்ஸ...

சோமவன்ஸ தாம் புதிய கட்சியொ ன்றை ஸ்தாபிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

1965-ம் ஆண்டில் ரோஹண விஜேவீரவால் ஸ்தாபிக்கப்பட்ட ஜே.வி.பியின் தலைவராக சுமார் 15 ஆண்டுகள் பதவிவகித்திருந்த சோமவன்ஸ அமரசிங்க 2014-ம் ஆண்டு பெப்வரவரி மாதத்தில் தலைவர் பதவியிலிருந்து மிகவும் கௌரவமான வகையில் விலகிக் கொண்டு நாடாளுமன்ற உறுப் பினர் அநுரகுமார திஸாநாயக் கவிடம் தலைமைத்துவத்தைக் கையளித்திருந்தார்.

1989/ 90 களில் ஜே.வி.பியின் முக்கிய தலைவர்கள் அப்போ தைய அரசினால் அழித்தொழிக் கப்பட்ட நிலையில் சின்னாபின்ன மாயிருந்த கட்சியை மீளக்கட்டி யெழுப்புவதில் சோமவன்ஸ அமர சிங்கவின் தலைமைத்துவம் முக் கிய பங்காற்றியிருந்தமை சுட்டிக்காட் டத்தக்கது. (செ-11)

# மக்கள்...

கள், தேர்தலில் போட்டியிடுவது குறித்து இன்னமும் நான் தீர்மானி க்கவில்லை, ஆனால் மக்கள் வேண்டுகோள் விடுத்தால் என்னால் புறக்கணிக்கமுடியாது

எதிர்வரும் பாராளுமன்ற தேர் தலில் எனக்கு போட்டியிடு வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என நம் பிக்கை கொண்டுள்ளேன். நான் சுதந்திரக்கட்சியை சேர்ந்தவன். எனது வாழ்நாள் முழுவதும் அவ் வாறே இருந்துள்ளேன்.

இவ்வாறான சூழ்நிலையில் கட்சி எனக்கு ஏன் போட்டியிட அனுமதி மறுக்கவேண்டும். நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பி லேயே போட்டியிட விரும்புகிறேன் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியை சேர்ந்தவன் என்பதை புறக் கணிக்க முடியாதுஎன அவர் குறிப் பிட்டுள்ளார். (செ-11)

# மீள்குடியேற்ற...

பலர் வாடகை வீடுகளில் குடி யிருந்து வருகின்றார்கள்.

இந்தப் பிரதேசத்தில் ஆயிரம் ஏக்கர் காணிகளை, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப் போவதாக அறிவித்தி ருந்த அரசாங்கம் மூன்றாம் கட்ட மாக வறுத்தலைவிளான் பகுதியில் ஒரு தொகுதி காணிகளை விடுவித் திருக்கின்றது.

அந்தப் பகுதியில் மீள்குடியேறு வதற்காக ஆவலோடு சென்றவர் களில் பல குடும்பங்களின் காணி களில் இராணுவம் முகாம் அமைத் திருப்பதைக் கண்டு, செய்வதறி யாமல் மீண்டும் தமது தற்காலிக இடங்களுக்கே திரும்பியிருக் கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் மீள்குடியேறும் வகை யில் அங்குள்ள இராணுவ முகாம் கள் அகற்றப்பட வேண்டும் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள் ளார்.

பல வருடங்களின் பின்னர் மீள்குடியேறுவதற்காக அனுமதிக் கப்பட்டுள்ள பகுதியில் இவ்வாறு இராணுவம் நிலைகொண்டிருப் பது அவர்களின் மீள்குடியேற்றத் திற்கு உகந்ததல்ல எனவும் அவர் கூறினார். (செ-11)

# வடக்கு...

உறுப்பினர் தயாரத்ன, த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, கிழக்கு மாகாண விவசாய அமைச சர் துரைராஜசிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலையரசன், மு.இராஜேஸ் வரன் மற்றும் அமைச்சின் செய லாளர்கள் வைத்தியசாலை வைத் தியர்கள், தாதிமார்கள் நலன்புரி, அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச் சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன.

நான் இங்கு மிகுந்த மனவே தனை அடைகின்றேன் காரணம் தமிழில் பேசமுடியாதமையினை இட்டு. இதற்கு முதற்காரணம் எமது நாட்டில் உள்ள கல்விக் கொள்கை யாகும். எம்மைப் பொறுத்தவரை யில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு பாடங்களும் ஒழுங்கான முறையில் கற்பிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

நீங்கள் தற்போது நாட்டின் தேசிய கீதத்தினை சிங்களத்தில் பாடி இருந்தீர்கள். ஆனால் உங்கள எத்தனை பேருக்கு அது விளங்கி யிருக்கின்றது என்று எனக்கு தெரி யாது. அதன் காரணமாக அடுத்த முறை இந்த வைத்தியசாலைக்கு வருகைதரும் போது தேசியகீதத் தினை தமிழில் பாட வேண்டும் எனபதனை கேட்டுக்கொள்ள விரும்பு கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங் கத்திலே தேசிய கீதத்தினை தமி ழில் பாடப்படவேண்டும் என்பதில் குரல் கொடுத்தவர்களில் நானும் ஒருவன். குறிப்பாக நானும் வாசு தேவ நாணயக்காரவும் நாங்கள் இருவரும்தான் சிங்கள மொழி யில் மாத்திரம் தேசிய கீதம் பாடப் படவேண்டும் என்று கூறியபோது அதனை எதிர்த்தவர்கள். நாங்கள் இருவரும்தான் என்பதனை உங்க ளுக்கு கூறிக்கொள்ள விரும்புகின் றேன்.

நாங்கள் இந்த நாட்டிலே ஒரு ஆட்சிமாற்றத்தினை ஏற்படுத்தி விட்டு தமிழில்தான் தேசிய கீதத் தினை பாடவேண்டும் எனவும் கேட்டிருக்கின்றோம். தேசிய கீதமா னது சிங்களத்தில் எவ்வாறு அழ கானதோ அவ்வாறு தமிழிலும் அழகானது. அவ்வாறான தேசிய கீதத்தினை தமிழில் பாடுவதில் என்ன குறை இருக்கின்றது.

தற்போதைய ஜனாதிபதி ஆரம் பித்த கொள்கைகளின் அடிப்படை யிலே எமது நடவடிக்கைகள் அமைந திருக்கின்றது. அதற் கிணங்க அம்பாறையிலும் கல்முனையி லும் வைத்தியசாலைகளுக்குச் சென்று பல வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்திருக்கின்றோம்.

தேர்தலுக்கு முன்னர் இங்கு வந்து சென்றிருந்தோம். அந்த நேரம இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எங்களுக்கு மிகுந்த வரவேற்பு செய் திருந்தார்கள். அதனால்நான் ஜனாதி பதியிடம் கூறினேன்.

கட்டாயமாக நாங்கள் அம்பா றைக்கும் கல்முனைக்கும் போக வேண்டும் என்று கூறினேன். அவர் தவிர்க்கமுடியாத காரணத் தினால் இங்கு வருகைதர முடியா மல் போய்விட்டது.

தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில உள்ள வாக்குப் பெட்டிகளை எண் ணுகின்ற போது அதிகமான வாக்கு கள எங்களுக்கே கிடைத்திருந்தது. ஆனால் வெற்றிலைக்கு குறைந்தள வான வாக்குகளே கிடைத்திருந்தது.

இந்த நாட்டிலே தாங்கள் இரண் டாம் தர பிரஜைகள் என்று எண் ணியிருந்த மக்கள் தற்போது முன் னிலைக்கு வந்திருக்கின் றார்கள். எங்களதும் தற்போதைய ஜனாதி பதியின் கொள்கை என்ன வென் றால் இந்த நாட்டிலே இரண்டாம் தர பிரஜை என்ற ஒன்று இல்லை என்பதுதான்.

எங்களது அடிப்படை கடமை களில் ஒன்று இந்த நாட்டிலே பிரி வினை அற்ற ஒரு சமுதாயத்தினை கட்டியெழுப்பவேண்டும் என்பது தான். நாங்கள் அனைவரும் இலங்கையர் என்ற ஒரு எண்ணம் எங்கள் அனை வரது உள்ளத்திலும இருத்தல் வேண்டும் என அமைச் சா ராஜித தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்த்தேக்கத்தில்...

மஸ்கெலியா மொக்கா தோட்டத்தில் நண்பர் வீட்டிற்கு பிரஸ்தாப இளைஞன் நேற்று காலை வேளையில் தனது நண்பரோடு நீராடச் சென்றுள்ளார்.

அதன் பின் தனது நண்பன் நீராடி கொண்டிருக்கும் வேளையில் திடீரென காணாமல் போயுள்ளதாக அவரின் நண்பன் மஸ்கெலியா பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் கடற்படையினர். நீர்தேக்கத்தில் காணாமல் போனவரை தேடும் பணியில் ஈடுபட்ட போது சுமார் 5 மணித்தியாலயங்களின் பின் சடலத்தை நீர்தேக்கத்திலிருந்து மீட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் யாழ்ப்பாணம். கைதடி பகுதியை சேர்ந்த 19 வயதுடைய அருளானந்தன் டிலோஜன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் கடந்த 12ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து மஸ்கெலியா பகுதியில் நண்பரின் வீட்டிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


**BEACON** வெலிங்டன் சந்தி, யாழ்நகர்

கலைப்பிரிவு-A/L 2017

புதிய பிரிவு ஆரம்பம் 18.04.2015

காலை -10 மணி

| | |
|---|---|
| பொருளியல் | Mr.K. பிரதீபன் |
| அளவையியல் | Mr.S.S.மனோகரன் |
| தமிழ் | Mr.T.ஜீவானந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | Mr.T.அயூரன் |
| புவியியல் | Ms.லிரின்சியா |
| இந்துநாகரிகம் | Mr.A.P.நேசன் |
| ஊடகவியல் | Mr.S.மனோகரன் |
| அரசியல் | Mr.திருமுருகன் |
| வரலாறு | Mr.R.ராஜ் |
| சித்திரம் | Mr.K.கஜன் |

தரமான கல்வி மூலம் வளமான எதிர்காலம் Beacon

BEACON வர்த்தகப் பிரிவு

A/L 2015, 16 & 17 புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்

18.04.2015 காலை 10 மணி

கணக்கீடு:-R.சுகிர்தன்
பொருளியல்:-K.பிரதீபன்
வணிகக்கல்வி:-V.முரளி


## எமக்கு சாதகமான...

செயலணிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் நடைபெற்ற விளக்கம் அளிக்கும் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு.

இன்று இலங்கை தமிழர்களுடைய பிரச்சினைகள் அனைத்தும் சர்வதேச சமூகத்துக்கு முன்னால் கொண்டு செல்லப்பட்டுள்ளன. குறிப்பாக ஐ.நா.சபையின் மனித உரிமை குழுவுக்கு முன் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருகின்றன. அதன் நிமித்தம் சர்வதேச விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன.

ஐ.நா .சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை இவ்வருடம் மார்ச் மாதம் வெளி வந்திருக்க வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு. தான் ஐ.நா.சபையினுடனும் மனித உரிமை பேரவையுடனும் ஒத்துழைக்கத் தயார் என்று அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் அந்த விசாரணை வெளியிடப்படுவது இவ்வருடம் ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவையின் நிலைமைகளைப் பொறுத்தவரை உண்மைகள் அறியப்பட வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும். நடைபெற்ற வேண்டத்தகாத சம்பவங்கள் இலங்கையில் மீண்டும் நடைபெறக் கூடாது என்பது அவர்களின் உறுதியான நிலைப்பாடு. விசேட அறிக்கையாளர்கள் கூட சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்கள். எனவே இவற்றை ஒட்டு மொத்தமாக அவதானிக்கின்ற போது எமக்கொரு நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகி இருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தை நாம் முழுமையாக பயன்படுத்த வேண்டும். புதிய தேர்தல் முறை சம்பந்தமாக பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாக தீர்க்கமான முடிவு அரசாங்கத்தினால் இன்னும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் புதிய தேர்தல் சம்பந்தமாக ஒரு முடிவை எடுக்கும் போது அந்த முடிவின் அடிப்படையில் நடைபெறவிருக்கின்ற தேர்தலில் நாம் பங்கு கொள்வோம். இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றி நாம் கலந்து ரையாடியுள்ளோம். ஜனாதிபதியினால் ஒரு செயலணி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக விரிவாக கலந்துரையாடியுள்ளோம்.

வட கிழக்கில் விசேடமாக தமிழ் மக்கள் மத்தியில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் ஒரு செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது. இச்செயலணியை தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நாம் சென்றவாரம் சந்தித்து உரையாடினோம். நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் சம்பந்தமாக உண்மைகள் அறிந்து நீதி வழங்கி, அதன் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும் நல்லிணக்கம் ஏற்பட்ட பின்பு மீண்டும் இவ்விதமான சம்பவங்கள் இடம்பெறாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் கூறினோம். அதற்காக சில திட்டங்களை வகுத்து அதன்படி செயற்பட அரசாங்கம் தயாராகி வருகின்றது. இது இன்றைய நிலை. அத்துடன் திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி பிரிவிலும் இதுவரை காலமும் காணி அபகரிப்புக்கள், தொழில் சார் விடயங்கள், புனர்வாழ்வு, கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள், காணாமல் போனவர்கள், விதவைகள், வாழ்வாதாரம் சம்பந்தமாக அனைத்து தரவுகளையும் உண்மை நிலைமைகளையும் சேகரித்து ஜனாதிபதி செயலணிக்கு சமர்ப்பிக்க வேண்டிய தேவையுள்ளது. கலாசார மையங்கள், ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் என்பன கடந்த காலங்களில் அழிக்கப்பட்டுள்ளன. இவை சம்பந்தமாக போதிய விவரங்களையும் தரவுகளையும் சேகரித்து ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் நல்லதொரு தீர்வை இவற்றுக்கு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உருவாகி இருக்கின்றது. அதை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டிய நேரம் வந்திருக்கின்றது என சம்பந்தன் தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவை...

மீண்டும் நுழையமுடியாது என்பது இந்த சந்திப்பில் கலந்துகொண்ட பலரின் விருப்பமாக காணப்பட்டது என மேல்மாகாண சபை உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் 30 வருட பயங்கரவாதத்தை முறியடித்த ஜனாதிபதி, பெருந்தலைவர், அவர் வெறும் சாதாரண அரசியல்வாதியாக பாராளுமன்றத்திற்குள் நுழைய முடியாது. இதனால் அவர் பிரதமர் வேட்பாளராகவே நுழைய வேண்டும். அவ்வாறு அவர் செய்வார் என நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வேண்டுகோளை புதிய ஜனாதிபதி செவிமடுப்பார் என்றே கருதுகிறோம்.

நாங்கள் இது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பல கூட்டங்களில் விவாதித்துள்ளோம் அதில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிட வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். மக்கள் மத்தியிலும் அதற்கான பாரிய எதிர்பார்ப்புள்ளது என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (செ-11)





‘சித்திரைக் குதூகலம், 2015’

களியாட்ட மற்றும் விநோத நிகழ்வுகள்

எதிர்வரும் சித்திரை வசந்தம்

22 23 24 25 மற்றும் 26 ம் திகதிகளில்

யாழ் மாநகரசபை திறந்தவெளி மைதானம் (சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக)

Municipal Ground - Jaffna (Opp. Subramanium Park)

பி.ப 02.00 மணிமுதல் இரவு 12.00 மணிவரை

மனதைக் கொள்ளைகொள்ளும் வர்ணஜால நிகழ்ச்சிகள்...

Galaxy Ride
Jet Ride
Bouncer
Marry Go Round

தினசரி இசை நிகழ்ச்சி

Small Train
Death of Well
Magic Shows
Sander Show

(சி-718)




நாவுக்கினிய விசேட உணவுகள், சிற்றுண்டி வகைகள் மற்றும் சுவைமிகு குடிபானங்கள்
மற்றும் பல பண்டிகைக்கால விற்பனைக் கூடங்கள்...
தெவிட்டாத மகிழ்ச்சிதரும் சிறப்பம்சங்கள்
இவற்றுடன் முன்னணி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சிகளுடன் மனதிற்கினிய ஓர் மாலைவேளை...







காணத்தவறாதீர்...

Event Organizer SC CREATIONS







Main Sponsor Rio Ice Cream

Official Electronic Media Sponsor SOORIYAN FM சூரியன் FM 103.4 103.6

Official Print Media Sponsor தினக்குரல்




விற்பனைக்கூட ஒதுக்கீடுகளுக்கு அழைக்கவும் : Vimal on 077 913 1735 / Susantha on 077 229 8014



# வேலை வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிரதேசங்களில் உள்ள O/L, A/L படித்தவர்களுக்கான 13 பதவி வெற்றிடங்கள் உள்ளன. உங்களுக்குத் தகைமை இருப்பின் தொலைத் தொடர்பினை ஏற்படுத்தி முற்பதிவுகளை செய்து கொள்ளவும்.

வயதெல்லை :- 18-35

(சி-719)

தொடர்புகளுக்கு :- 0773366453, 0771363797



## வெளிவாரி பட்டப்படிப்பை கற்க காத்திருக்கும் மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (ஒலுவில்) கலைமாணி (பொது) வெளிவாரி பட்டப்படிப்புக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L மூன்று பாடங்களும் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவுகள் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன (18.04.2015 -சனி) காலை 8.00 மணி முதல்...
- பதிவுகளுக்கு மேலதிகமான கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

(094)

**NJT** பட்டப்படிப்புகள்

இல. 55, பலாலி றோட், இலுப்பையடிச் சந்தி.

மேலதிக தகவல்களுக்கு:-0776624387



## WORLD WIDE EXPRESS & TRAVELS

யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்

அலுவலக திறப்பை முன்னிட்டு 31.04.2015 வரை 50% விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் (AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062

(சி-715)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.